# பழனி நொண்டி நாடகம்

பதிப்பாளர்

கோ. கணேஷ்

தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை - 600 005.
2007

# பழனி நொண்டி நாடகம்

"சுவடியியலும் பதிப்பியலும்"
பட்டயப் பேற்றிற்காகச்
சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு
அளிக்கப்படும் பதிப்பேடு

பதிப்பாளர்
**கோ .கணேஷ்**

**தமிழ் இலக்கியத்துறை**
**சென்னைப் பல்லைக்கழகம்**
**சென்னை - 600 005.**
**ஆகஸ்ட் - 2007**

“சுவடியலும் பதிப்பியலும்”

பட்டயப் பேற்றிற்காகச்

சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு

அளிக்கப்பெறும் ஆய்வேடு

எண்: 53010619

# நெறியாளர் சான்றிதழ்

**வீ. அரசு,**
பேராசிரியர் - துறைத்தலைவர்,
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - 600 005.

சென்னைப் பல்கலைக்கழக தமிழ் இலக்கியத் துறையில் நடைபெற்று வரும் சுவடியியலும் பதிப்பியலும் பட்டயப்பேற்றிற்காக **'பழனி நொண்டி நாடகம்'** என்னும் தலைப்பிலான சுவடியை **கோ .கணேஷ்** அவர்கள் என் மேற்பார்வையில் பதிப்பு செய்தார் என்றும், இந்த ஆய்வேடு அவரின் சொந்த முயற்சியில் உருவானது என்றும் சான்றளிக்கிறேன்.

நெறியாளர்,

**(வீ. அரசு)**

நாள்: - -2007
இடம்: சென்னை-5.

# பதிப்பாளர் உறுதிமொழி

**கோ. கணேஷ்**
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - 600 005.

**சுவடியியலும் பதிப்பியலும்** என்னும் பட்டயப் பேற்றிற்காக சென்னைப் பல்கலைக்கழக தமிழ் இலக்கியத் துறைக்கு அளிக்கப்பெறும் **'பழனி நொண்டி நாடகம்'** என்னும் தலைப்பிலான இப்பதிப்பேடு என் சொந்த முயற்சியில் உருவானது என்று உறுதியளிக்கிறேன்.

ஆய்வாளர்,

(கோ. கணேஷ்)

நாள்: - -2007
இடம்: சென்னை-5.

# உள்ளடக்கம்

| | பக்கம் |
| --- | --- |
| பதிப்புரை | 1-10 |
| பழனி நொண்டி நாடகம் | 11-89 |
| *பின்னிணைப்பு* | |
| செய்யுள் முதற்குறிப்பு அகராதி | 90-101 |
| துணைநூல் பட்டியல் | 102 |
| சுவயில் எழுத்தமைப்பு | |
| சுவடியின் முகப்பு பக்கம் | |

# பதிப்புரை

தமிழிலக்கிய வரலாற்றில் நாடகத்திற்கான கூறுகள் ஏராளம் எனலாம். ஆனால் அவை குறித்த முழுமையான பதிவுகள் குறைவே, குறிப்பாக அவை வாய்மொழி மற்றும் நிகழ்த்துதலின் வழியே அறியப்படும் அளவிற்கு அச்சு ஊட்த்தில் இடம்பெறவில்லை, மனிதனின் உணர்ச்சியோ அல்லது வெளிப்பாடோ கலையாக ஒழுங்கமைவுடன் மாற்றப்படுகின்றன. அதாவது மனித உணர்வின் நீட்சியே கலையாக குறிக்கப்படுகிறது. இதில் நிகழ்த்துதல் சார்ந்தது (ஆடல் + பாடல்) நாடகம், நாடகம் என்பது வரலாற்றில் தொடர்ச்சியாக பல்வேறு மாற்றங்களை காலசூழலுக்கேற்ப உட்கொண்டு மாற்றமடைந்துள்ளன.

அவ்வகையில் தொல்காப்பியம் முதலே இன்றுவரையில் தமிழின் நாடகத்தின் போக்கானது மாறியுள்ளது. நாடகம் குறித்து

"நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்"
- தொல். பொருள்

தொல்காப்பியத்தில் நாடகம் குறித்த சொல்லாடலைக் காணலாம். இவைகுறித்து

உரையாசியர்களுக்கு உள்ள கருத்து முரண்கள் ஒருபுறமிருக்க தொல்காப்பியர் மெய்ப்பாட்டியலில் எண்வகை மெய்ப்பாடுகளை கூறியவை நாடகத்திற்கான அச்சான்றாக கூறப்படுகின்றது.

மேலும் சங்க இலக்கியங்களிலும் நாடகம் என்ற சொல் பயிற்றுவந்துள்ளன. அவை

"நாடக மகளிர் ஆடுகளத்தெடுத்த" - பெரும்பாண்-56

"பாடல் ஓர்ந்தும் நாடகம் நயந்தும்"- பட்டினபாலை-113

இதுபோன்ற பல்வேறு வகையில் நாடகம் குறித்து சொல்லாடல்களை தரவாகக் கொடுக்கலாம், இருப்பினும் நாடகம் குறித்த முழுமையான வளர்ச்சி போக்காக சிலப்பதிகாரத்தினாலே நிறுவப்படுகிறது. மாதவியின் 11ஆடற்வகை வேத்தியல், பொதுவியல் ஆடற்கலையினை காணலாம்.

சிந்தாமணியில் நாடகம் பற்றிய குறிப்புகள் உள்ளன. அவை இன்னிசைக் கூத்து, சரிதைக் கூத்து என்று இருவகைக் கூத்துக்களைப் பற்றி குறிப்பிடப்படுகிறது. இதனையடுத்து பதினோரம் நூற்றாண்டின் இறுதிவரை நாடகக்கலையைப் பெருத்தவரை இருண்டகாலம் என்று குறிக்கவேண்டுமென சக்தி பெருமாள் கூறுகிறார்.

இவ்வாறு காலந்தோறும் நடகத்தின் போக்கானது காணப்படுகின்றன. இவ்வகையிலே தொல்காப்பியம்,

சங்கஇலக்கிம் காப்பியம் இவைகளுக்கடுத்து பிரபந்த இலக்கியங்களிலேயே நாடகங்களின் நிலைகுறித்து விரிவான தளத்தில் பேசப்பட்டுள்ளன. அவற்றில் பள்ளு, குறவஞ்சி, இலக்கியங்களை நாடகங்களாக நிகழ்த்தப்பட்டும் பெருமளவில் மக்களை ஈர்த்தும் வந்துள்ளன. அதற்கு அவை பண்டித நடையில் அமையாமல் எளியமையாக மக்கள் இலக்கியங்களாக மலர்ந்தன

**நொண்டி நாடகம்**

இவ்வகையில் கி.பி. 17,18 ஆம் நூற்றாண்டுகளில் நொண்டி நாடகங்கள் தோன்றத் தொடங்கின, குறிப்பாக நொண்டி நாடகமென்னும் புதிய இலக்கிய வகைமையாக உருப்பெற்றன எனலாம். ஆனால் பள்ளு, குறவஞ்சி ஆகிய இலக்கிய வகைகளோடு ஒப்பிட்டு நோக்கயில் நொண்டி நாடகங்கள் குறித்த ஆய்வுகள் பெருமளவில் மேற்கொள்ளப்படவில்லை.

முத்துசண்முகன், அசோகன், இளங்கோ போன்ற ஒருசிலரலலேயே நொண்டி நாடகங்கள் குறித்து நூல்கள் வெளிவந்துள்ளன. நொண்டி நாடகங்கள் பெரும்பாலும் ஒரே கதைப்போக்குடையனவாக காணப்படுகின்றன. அதாவது திருடன் ஒருவன் தவறான வழிகளில் சென்று அவனுடைய தவற்றுக்கான மாறுகால் மாறுகை துண்டிக்கப்பட்டு பின்னர் இறைவனிடம் சென்று

தொழுது அக்கை கால்களை மீண்டும் பெறுவதாக அமைவதே நொண்டி நாடகங்கள்.

நொண்டி நாடகம் எனப்பெயர்பெற காரணமாக கு. பரமசிவன் (சிற்றிலக்கிய சொற்பொழிவுகள்) அவர்கள் நொண்டி ஒருவன் தன் கடந்த கால வாழ்வினை இசைப்பாடலில் பாடி நடித்துக் காட்டியமையின் இது நொண்டிநாடகம் எனப்பட்டது என்பர்.

மேலும் அசோகன் முத்துசண்முகம் அவர்கள்.

நொண்டி நாடகத்தை ஆடுகிறவன் காலை நொண்டிக் கட்டுக் கொண்டு ஆடுவதால் இதனை ஒற்றைக்கால் நாடகம் என்றும் கூறுவார்கள். என்று குறிப்பிடுகிறார்கள் இவ்வாறு நொண்டி நாடகம் குறித்து பல காரணங்கள் கூறப்படுகின்றன.

நொண்டி நாடகங்கள் கி.பி. 17,18 ஆம் நூற்றாண்டுகளில் தோன்றி இன்றளவும் ஒருசில நொண்டிநாடகங்களே தோன்றியுள்ளன. இதுவரை தோன்றியுள்ள நொண்டி நாடகங்கள் பெரும்பாலும் ஊர்ப்பெயர்களாலும், தலங்களின் மற்றும கடவுளர்களின் பெயர்களுமே தோன்றியுள்ளன. மேலும் இவை திருநெல்வேலி, தஞ்சை மாவட்டதிலுமே பெரும்பான்மை மையப்படுத்தி தோன்றியுள்ளன.

## நொண்டி நாடகங்கள் பெயர்களும்தோன்றியவையும்

நொண்டி நாடகங்கள் எனும் நூலில் 26 நொண்டி நாடகங்களின் பட்டியல் தரப்பட்டுள்ளது மேலும் உலகத்தமிழராய்ச்சி நிறுவனம் ஓலைச்சுவடிப் பட்டியல் 3 குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் திருக்கச்சி நம்பி நொண்டி நாடகம் கு. அழகிரிசாமி, புதுவை நொண்டிநாடகம் திருவாமாத்தூர் தண்டபாணி சுவாமிகள் திருவனந்தபுரம் நொண்டிநாடகம் - கந்தசாமிப் புலவர் என்று இம்மூன்றுடன் மேலே குறிப்பிட்டவை அனைத்தும் சேர்த்து 32 நொண்டி நாடகங்கள் உள்ளதாக நா. இளங்கோ அவர்கள் குறிப்பிடுகிறார்.

ஆனால் ஒருசிலவே தற்போது கூறப்படுகின்றன அந்தவகையில் 1. திருக்செந்தூர் நொண்டி நாடகம் - முதல் நொண்டி நாடகமாக குறிப்பிடப்படுகிறது. 2. திருப்புல்லாணி 3, திருமலை, 4. திருக்கச்சூர், 5. திருவிடைமருதூர் 6. தில்லைவிடங்கள் ஐயனார் 7. குன்றக்குடி குமரன் பேரில் 8 ஆதிமூலேசர் 9. சீதக்காதி 10.ஞான நொண்டி நாடகங்கள் என இவையே அதிகளவில் கூறப்படுவன.

## பழனி நொண்டி நாடகம்

அந்த வகையில் பழனி நொண்டி நாடகம் அரசினர் கீழ்த்திசை சுவடியியல் நூலகத்தில் (சென்னை)

சுவடியெண்டி.495 கட்டு எண். டிடி. 289 என்ற சுவடியை நான் பதிப்பிற்காக மேற்கொண்டேன் இச்சுவடியானது

அளவு 15 7/8  1 1/8  அங்குலமும்

பக்கங்கள் 96

வரிகள் -6 (ஒருபத்திற்திற்கு) என இச்சுவடியில் மொத்தம் 250 பாடல்கள் மட்டுமே கிடைக்கின்றன. இதில் முதல் எட்டு பாடல்கள் இப்பிரதியில் இல்லை மேலும் 9 முதல் 26 பாடல்கள் வரையிலான ஏடுகள் முரிந்துள்ளன. இப்பிரதியின் 36 முதல் 42 வரையிலான எண்கள் கொண்ட பாடல்கள் இல்லை மீதமுள்ள 27 முதல் 250 வரையிலான ஏடுகள் நன்றாகயுள்ளன, ஆயினும் இச்சுவடியை நான்தெரிவு செய்யக்காரணம் இதுவரை இப்பெயரிலான நொண்டி நாடகம் பதிப்பிக்க பெறவில்லை பெயர்மட்டும் ஒருசில இடங்களில் குறிக்கப்படுகிறது.

இந்நொண்டி நாடகம் கி.பி. 18ஆம் நூற்றாண்டின் இறுதியாக இருக்கலாம் ஏனெனின் இவற்றின் எழுத்துக்களும் சொல்லாடல்களும் அவ்வாறாக கருத காரணமாகும் மேலும் அதுமட்டுமல்லாமல் பழனி நொண்டி நாடகம் என்ற பிரதி அரசினர் கீழ்த்திசை சுவடியியல் நூலகத்தில் இருவேறு பிரதிகள் காணப்படுகின்றன அவை டி.டி. 494 டி 288 என்கிற

கட்டில் காணக்கிடைக்கின்றன. இவ்விரு பிரதியில் கதைக்கருவில் மட்டுமே ஒருதன்மையனதாய் உள்ளன. ஆனால் அப்பிரதி பலரால் எழுதப்பட்டு ஒருசேர தொகுத்து வைக்கப்பட்ட பிரதியாக இருக்கின்றது.

மேலும் அவை அதிகளவில் கிரந்த எழுத்துக்கள் கொண்டவையாக உள்ளன. ஆயினும் அப்பிரதியே முன் தோன்றியதாக இருக்க கூடும். இவ்விரண்டிற்கும் பிரதிபேதம் காணப்படுகிறது. எழுத்தமைப்பும் யாப்பமைப்பும் மாறுபாடுகின்றன.

**பழனி நொண்டி நாடகம் கதையும் கதைபோக்கும்**

இப்பழனி நொண்டி நாடகமானது அயோத்தி நகரத்திலிருந்து வாகுசிங்கனென்ற ஒருவன் நான் பழணில் வந்து சேர்ந்து அத்தலத்து முருகக் கடவுளை வழிபட்டு அங்குள்ள சின்னப்பனென்னும் பிரபுவால் சேர்வைப்பட்டம் கொடுக்கப்பெற்ற அவனுக்குச் சில உதவிபுரிந்து பின்பு மதுரைச் சொக்கலிங்க நாயகர் வீட்டில் திருடிக் கைகாலறுப்புண்ட காலத்து ஈஸ்வரன் அருளால் மறுபடியும் அவை வளரப்பெற்றேன் என்று கூறுவதாகச் செயயப்பட்டிருக்கிறது.

மேலும் இதில் இடம்பெறும் கதாபாத்திரங்களின் வாயிலாக ஒருவரே கதைச்செல்லுதல் போன்று அமைக்கப்பட்டுள்ளது. வாகுசிங்கன் அவன்

அயோத்தியில் புறப்பட்டு வழியில் தேவடியாள் ரத்தினியிடம் தங்கியிருந்து பின்பு மதுரையில் மாணிக்ககல்லை திருடி மீண்டும் ரத்தினியிடம் சென்று கொடுத்து, அவள் அதை செட்டியிடம் விற்கும்போது தட்டான் பார்த்து மன்னனிடம் கூறி வாகுசிங்கன் பிடிப்பட்டு கைகாலறுக்கப்பட்டான் பின்பு ஈசுவரனை வேண்டுதல் என்று இச்சுவடி முடிவடைகிறது.

## யாப்பும் நாடகமும்

நொண்டி நாடகங்கள் பெரும்பாலும் சிந்து மற்றும் விருத்தத்தால் அமைவதுண்டு. மேலும் நொண்டி நாடகத்திற்குரிய இலக்கணம் பிரபந்தக் திரட்டில் கூறப்பட்டுள்ளது. அவை கலிவெண்பா சிந்து ஆகிய யாப்புகளில் இயற்றப்படும்

மேலும் பாடல் வகைகள் விருத்தம், தரு, சிந்து ஆகிய யாப்புகளாலும் இயற்றப்பட்டன. பெரும்பான்மை நொண்டிச் சிந்தால் இயற்றப்படும் சிறுபான்மையே கலிப்பா ஆனந்தக்களிப்பு, வெண்பா, ஏசல் ஆசிரிய விருத்தம் போன்றவற்றால் அமையும், அவ்வகையில் பழணிநொண்டி நாடகமானது தரு, விருத்தம் மற்றும் கலி ஆகியவற்றால் அமைந்துள்ளது. இவை பேச்சுவழக்கு சொற்களால் நாடகபோக்கு காணப்படுவதால் பல இடங்களில் யாப்பமைதியுடனே செய்யுட்கள் அமைக்கப்பட்டுள்ளன.

### பதிப்பின் சிக்கல்கள்

சுவடியியல் பட்டயம் பேற்றிற்காக பதிப்பிற்காக சுவடிகளை தெரிவுசெய்து மிகப்பெரிய பணியாக இருந்தது. சுவடிகள் இருக்கும் இடங்களுக்கு சென்றதில் செம்மஞ்சேரி ஆசியாவில் நிறுவனம் அங்கு சென்று சுவடிகளை தெரிவு செய்து ஆனால் நகலெடுக்க தராத காரணங்களால் அதைவிட்டு பின்பு மீண்டும் அரசினர் கீழ்த்திசை சுவடி நூலகத்திலிலே இச்சுவடியை தெரிவுசெய்து நகலெடுப்பதற்கு சுமார் ஒரு மாதத்திற்கு அனுமதியளிக் காமல் நகலெடுக்கும் எ ந்திரத்தையும் சரிபார்க்காமல் அலையவேண்டிய நிலை கீழ்த்திசை சுவடியில் நூல்கத்தில்

மேலும் முன்பிரதி கிரந்த எழுத்துக்கள் அதிகளவிலும் மற்றும் எழுத்துக்கள் புரியாததாலும் இப்பிரதிகளை பிரதிபேத காண ஓரளவே முடிந்தது. இதனை பின்வரும் ஆய்வினை மேற்கொள்வோர் இதனை காணலாம். மற்றும் இப்பிரதிகளில் பாடல்கள் சில இல்லாததாலும் ஏடுகள் சிதலமலைந்துள்ளதாலும், யாப்பு குறித்த சிக்கல் இதில் சில இடங்களிலே காணப்படும் தரு என்கிற இலக்கணத்தினாலேயே பெருமளவில் பாடல்கள் உள்ளன. சிலயிடங்களில் விருத்தம் பயின்று வந்துள்ளது. இவ்வாறு

பதிப்பின்போது இக்காரணங்களால் தேக்கநிலை ஏற்பட்டன.

**இப்பட்டயபேற்றின் பயன்**

இவ்வாறான பதிப்பின்போது சுவடிகுறித்த புரிதல், முன்னோர்களான சி.வை.தா. உ. வே.சு. எஸ்.வையாபுரி பிள்ளை போன்றோர்கள் அவர்களின் அரிய பணி. சுவடியியல் இருந்து அச்சேற்றுதல் உள்ள சிரமங்கள் மற்றும் புத்தக வடிவமைப்பு தொடர்பான அறிமுகம். மேலும் சுவடிபாதுகாப்பு குறித்த பிரக்ஞை உருவானது எனலாம்.

இப்பட்டயப் பேற்றினை நடத்தும் சென்னைப் பல்கலைக்கழகத்திற்கும், தமிழ் இலக்கிய துறைத் தலைவர் மற்றும் எனது நெறியாளருமான பேரா.வீ. அரசு அவர்களுக்கும் எனது நன்றியினை தெரிவித்துக கொள்கிறேன். மேலும் பதிப்பிற்காக சுவடியை நகலெடுத்தளித்த அரசினர் கீழ்த்திசை சுவடியியல் நூலகத்தாருக்கும் இப்பதிப்பிற்காக உடனிருந்து உதவிபுரிந்த சுதாகர், சுபா, அருணா, ஜீவா, ரேவதி ஆகியோர்களுக்கும், குறிப்பாக என் குடும்பத்தாருக்கும் மற்றும் அச்சுவடிவம் தந்த டுடே கிராபிக்ஸ்க்கும் என் மனமார்ந்த நன்றியினை உரித்தாக்குகிறேன்.

தரு

மத்தகேசம் ஒத்தை நடை மின்னாள்
    மோகமய்யல் தந்துகூடிபின் மெய்பசனஞ் சொன்னாள்
பத்தாவே னானுடலில் அப்பாதி நான்
    பஷ்ஷிமாக  உன் மீதில்
மெத்தவே யெனனா விற்கதாருள் குமரேசர்
    பாதம்னான் காணவேசொல் லுகுறேன் ஆணையிது என்றான்
சுத்தரங்கக் காறி யென்றிருந்தேன் செயித
    சூதும் வாதும் வேதினையும் ஏதுமறியேனே

சூதான மான ஆந்தைக் கண்ணும் நீரல
    சுத்தியாடும் சுழல்வண்டு உத்தகுடல் நஞ்சும்
பாதாள அம்பி(லி)க்கைக் கோட்டான நெய்யும்
    பச்சொணான் பிச்சும் நிகப்பருத்தி நிண்நெய்யும்
மூதேவி தாய்க் கிழவி கூட்டு அந்த
    மூணுனாள் எந்தனுக்கு பாலுஞ் சோத்திலிட்டாள்
ஆதாளி யான ரத்தின மங்கை
    ஆசை மலையனான் ஆருமறி யாரோ

கற்பூரச்  சுருள் களிப்பாக்கும் நல்லகத்தக்
    காம்பெலரிசி கல்லுண்சை சுண்ணாம்பும்
அற்புத மாகவே கூட்டி  அவளங் காலைகாட்டி
    மதன பங்கமெல் லாஞ் சொன்னாள்

மெய்ப்பான வேலைச் சொன்னோபன் நல்ல
வெகுமானந் தந்தமுத்து மாலையின் மேல்பட்டு
தப்பிதமில் லாமேலே கழத்தி அவள்
தாய்கையில் குடுத்துனான் பேய்போலே நின்றேன்.

30. அந்திக் கடைச் சிலவுக்கு கேட்டாள் - னான்
அன்பதுபொன் னொருங்காலே தென்புடன் அளித்தேன்
சந்திரக் காவிச் சேலையிக்கு தெண்ணாள் யிட்ட
சாப்பளி முத்துமாலை சந்தோஷத்தி லீந்தேன்
தந்திர உபாய மதைப்பண்ணி கைக்கித்
தங்க கடகமொன்று சங்கையறக் கேட்டாள்
யிந்திர சாலை வித்தைக் காரியாலே னானிட்ட
தெல்லாந் தட்டிக் கொட்டிக்கட்டிக் குடுத்தேனே.

31. கையிலுள்ள காசு பொருளெல்லாம் னான்
கழட்டிக் கொடுத்து காதத்த ஊசியானேன்
(மையல்) மையல்வரும் ஆசையதி னாலே அந்தவஞ்சியும்
அழைத்து என்னை வாடா போடாயென்றாள்
எய்யும் தன்கணை அய்ந்துனாலே னானே
மாறி அங்கையவள் கால்மாட்டில் நின்றேன்
பொய்யு மெய்யுஞ் சொல்லி யவள்தாயார் யென்னைப்
பிடித்துத்தள்ளிக் கதவை அடைத்துத் தாள் போட்டாள்

கலி

32. பிடித்தவள் தள்ளிவிட்டுப் போவென்று சொன்னதற் பின்
மடித்தவள் தலைவாசல்த் தான்மறித் திருந்தவன் பொங்கிக்
கொடுத்த தோர்பொருளை யெல்லாம் குறிப்புடன்
கணக்குப்பார்த்துப்
பிடித்தநான் கொண்டு வேலா யிதமேதொழு கின்றேனே

33. மெய்யினால்ப் பழணியாளும் வேலரைத் துதிசெய் யாதார்
அய்யமில் லாமல்த்தேடி ஆழவே புதைத்த செம்பொன்
நய்யவே வந்த நோய்க்கும் நானில் மாண்டபேற்கும்
கயபடா தீயக்கும் துஷ்ட்டர் கள்ளருக்கு உந்தானே

34. அத்தனா ரருள்பாலன் வேலரடி யிணையானுதினம்
போற்றாமல்
சித்தசன கணையாலே ஆசைத்தினந் தினம்வருகிற படியாலே
மெத்தவே பொருள்தேடி அவளைவேடிக்கையாகவே
கூடவென்றே
பத்தியாய் அவள்மீதில் வைத்துனான் பணந்தேடப்
பிடிப்பட்டேனே

35. தரு. தெந்தின தின தினா
சக்கரைவா யிதழாள் என்மேல் சந்தோஷத் தயவாக வென்றே
சொக்குப்பொடி போட்டு ரொக்கம் சூதாடிப் பொருள் தேடி
வென்றே

தெற்குத்திசை னோக்கி சாத்திரந் திருவள்ளுவ னையான்
கேட்டேன்
பக்குவமல்ல வென்று சொன்னான் பாதகன் முத்துத்
தாண்டவனும்.

37. கொஞ்சிய கிளிமொழியாள் ரத்தினக் கொடியிடை
வஞ்சி...............................
(36,37,38,39,40,41 பாடல்கள் இச் சுவடியில் இல்லை)

42. ........................................... போத்தாமல்
கச்சுப்பூண் முலையாள் ரத்தின காதலியாருட ஆசையினால்
பச்சைக்கழு நிணமும் வல்வால் பாலில் ஓட்டைப்பழு ணிமும்
உச்சிதமாக வல்லோ ஆமை ஓட்டிலிலே மையைக்
கூட்டினனே

43. சத்திகா ரணியே உத்தமி சரசுபதி சாமுண்டி சங்கரியே
பத்தினி யாமளியே நீலிபஞ்சாஷ் ஷரத்தில்ப் பதிந்தவளே
வேதகுபார் பரியே துற்க்கி வீரசமையல் கோலாகலியே
நித்திரை மூதேவித் தாயே நீயே துணையாய் வருவாயே

45. ஊர்காக்குந் தாயே காளிஉத்தமி அய்யனார் புடக்கலையே
போரான தாயே ஆயிபெரிய முத்தளிக்கும் பேரரசே
ஆராரும் புகழும் வயிரவி அகோரிமாரி எல்லம்மையே
தூரக்களவு கொள்ளப் போறேன் துணையாய் நீயும்
வருவாயே.

46. வையாபுரிக் கரையில் பிளியமரத் தடிச்செல்வ
வினாயகனே
அய்யாஉனை தொழுவேன்கள வுள்அடவுடன்
திரவியம்பலித்துத் தென்றால்
பொய்யாச் சொல்லயில்லை கோபுரம் பொன்னாலே
கட்டிமுடித் திடுவேன்
செய்யாமல்ச்செய்வீர் நீரும் சிந்தைமகிழ்ந்து வரந்தந் திடுவீர்

47. மாந்தையில் வாழ்வேந்தன் லோக
மனிதருக் கெல்லாம் தொழிலளித்து
ஆய்ந்திடும் புகழ்க்கீவார் நல்ல
அன்புடன் நல்லதம்பி ஆசாரி
போந்த வாக்கரிய குணன் அந்தப்
புண்ணியவான் கன்னக் கோல ளித்தான்
னாந்தான் வாங்கிக் கொண்டு
நடந்தேன் நல்லோர்க்கீய வீடுதேடி.

48. கலி

தஞ்சமென் றோரைக் காற்கும் தாரணி தன்னியமேவி
நெஞ்சுளே அன்புவைத் தோர்நினை விலேநடந்து
வாழ்வோன்
கொஞ்சிய மயிலிலேறும் குமரரை துதி செய்யாமல்
வஞ்சியார் மோக ரத்தின மங்கையாள் கள்ளனானேன்.

## தரு

49. சந்திர சூரசங்கரர் நல்ல

சரவணகாங் கயசண்முக குய்யரார்

நித்தம் னானுனைத் தொழுதேற்றி - அய்யா

நேசமுடனுனைப் பூசையள் செய்யாமல்

சித்திரமுக ரத்தின மங்கையாலே - நான்

சேவித்த பணமெல்லாம் சிந்துகுந்தமாக்கி

கத்தரிக் கோல்கையுங் கள்ளனானேன் - பழணிக்

கந்தனே உந்தனிடகாஷ்ஷி தருவாயே

50. அன்புடன் பழணி முருகேசர்

அவரடியிணைக் கண்டுனான் புரியபூசை செய்து

தென்புடன் நடந்து தெருவீதி வந்து

தெஷ்ண மூர்த்தியை அற்சனையள் செய்து,

துன்பமனு காதகாளி துர்கை - நீங்கள்

துணைவாருமென்று சொல்லி துய்யமலர் சாத்தி

பசும்பொன் மோதிரங்க களவுகொள்ள - விருப்

பாஷ்சி யீசரைக்கண் காஷ்ஷியாய் னான்கண்டேன்.

51. விருப்பாஷ்சி யீசரைனான் கண்டேன்போத

வேண்டுதெல்லாம் என்குறையள் காணத்தோண்ச்
சொன்னேன்

சரிப்போகாமல் அவற்குத் தானே அய்யா

சகியாது யிங்கேயது அமையாது வென்றார்

திருப்பாற்கட லில் பள்ளி கொள்ளும் எங்கள்
திருவேங்கிடப் பெருமாள் திருப்பதியே வந்துயிருப்பார்
நீரவரைப் போய்க்கொண்டு உனக்கென்ன வேணும்
மனதினில் அன்னது கேளென்றார்.

52. ஆண்டவன் உரைத்த மொழிகேட்டு
அதுக்கப்பால் நடந்துவெடச் செந்தூர்கடந்து
(கொ)கூண்டிருக்க உயிர்வாங்கும் ரத்தினி அந்தக்
கோதையார் ஆசையினால் கோண்டரங்கக் கொண்டு
பூண்டிடப் பணிகள் பொன்னின் பொட்டினான்
போதவே களவு கொண்டு போகலாகுமென்று
பாண்டிதம் பண்ணிக் கொண்டிருந்தேன் அந்த
பாளையக்காரரைக் கண்டு பயந்து வந்திட்டேனே.

53. வந்திரங்கி யவன்மலை கண்டேன் னான்
வாகுடனே காக மாமுனியை வலம்வந்தேன்
பந்தணியுஞ் செஞ்சடையி லீசர் அவரினைப்
பாதங்கண்டு னான் பணிய வேணுமென்று
கொந்துமலர் செண்பகப்பூக் கொய்து நான்
கோப்புடன் பூசையள் செய்து கும்பிட்டெதிர்நின்றேன்
அந்தச்சூ தெந்தனுக் கிங்காக அந்த
ஆதிமூலத் தன்னைத்தேடி அங்கேபோ னீயென்றார்.

54.அங்கிருந்து காவேரிவந்து அங்கே
ஆனதான பானங்கள் அடவுடனே செய்தேன்
அங்கிருந்து கங்குபாஞ்சாப் போலே முள்ளுக்
காடுசெடி வரப்புக் கடந்தெதிர் நடந்தேன்
செங்கனி மொழியாளா சையாலே யெங்கள்
செவ்வேள் முருகர்பாதஞ் சேவிக்க மறந்தேன்
சந்தத மதனை யளித்த தீத்தமலைச்
சண்முகச் சரவணமுரு கரையுங் கண்டேன்

55. தீத்தமலை னாதரைனான் போத்த அவர்
திருவாய் மகிழ்ந்தெனக்குப் பரிவாகச் சொன்னார்
பூத்தசெந் தாமரை மார்பன் அய்யா
பூதலத்தில் அயங்கார் செட்டி பூபாலன்
நேத்தியுடன் நம்மைப்பூ சைசெய்தோன் அந்த
நெறிபோலே வாழ்வாரை நினைத்தாயே - ஆனால்
கூத்தனை உதைத்த தறிவாயே என்று
குணதேகங் களாய்க்கோஷத் துக்கொண் டாரே

56. வெண்ணையென பார்வாய் முகரும் ரத்தினி
மெல்லிய ராசையினால் வெட்க்கி மிகக் கொண்டு
பெண்ணை நதி தனத்தில் வந்து மூழ்கிப்
பேசரிய அந்த ஆகப்பூசை மிகப் பண்ணி

குண்ணை வெண்ண வேல்முருகர் பாதம் மிகக்
கூறியே அன்பாய்னான் குனிந்துதெண் டனப் பண்ணி
அண்ணல்புரி செங்கமால் வந்து அந்த
ஆதினாத யிசுபரணை அடியிணைகள் கண்டேன்

57.பேரணிக்கதி பதியான் தானோன்
அய்யங்காா் செட்டிமக ராசன் உபகாரன்
சீருடனே பூசைசெய்ய மய்யா எங்கள்
செங்கமலனா தனைனான் சேவித்து முன்னின்றேன்
தாரணியுங் குமரேசா் பாதந்
தன்னையறி யார்வீட்டில் கன்னமிடு மென்றார்

58. மஞ்சு வந்து லாவுமலை மீதில்மேவி வாழ்ந்திடுவோன்
அண்ணாமலை யீசுபரனைக் கண்டேன்
அஞ்சாமல் வாவென் றழைத்து எனக்கரிய
விசேஷ மொன்று பரியாகச் சொன்னார்
தஞ்ச மென்று வருவாருக் கன்னம்
தானிடாத வீடுதேடி தப்பாமல் சென்று
கொஞ்சமாய் அன்னது பொன்னைக் களவு
கொள்ளை கொள்ளவேணு மென்றுவள்ளல் மிகச்
சொன்னார்

59. நினைக்க முத்திதரு மய்யாசொல்ல னான்
நெஞ்சினில் மகிழ்ச்சி கொண்டு நிண்ணையமதாக
கனக்க ரொக்கங் கனவுகள் கொள்ள அந்தக் கச்சியில்க்
கச்சாலையீசா் காஞ்சிபுரந் தனில்வந்து என்

மனைக்க வலையது தீரும் என்றுஏகாம்
பரத்தாரை வணங்கி மிக நின்றேன்
எனக்கது தெரியாதென் றுரைத்தார் யினியென்ன
செய்வோமென் றுசொல்லிப் பின்னையும்
நினைந்தேன்

60. பெருக்காறுஞ் சடைமுடிப் பீசர்அவர் பெத்த
குமரேசரவர் பெருமையுடன் வாழும்
திருத்தணி மாமலைதனில் வந்தேன் அந்தத்
தேவாதி தேவனைத் தெரிசினையள் செய்தேன்
ஒருக்காலை வாவென் றழைத்து ஏது
ஒருநாளும் நம்மை அன்பில் நினையாத வீட்டில்
யிருப்பான் பொருளைக் கொண்டோடு முனக்கென்ன
வேணுமென்ற தெல்லாம் கன்னமிடு மென்றார்

61. திடமுடனே அய்யா மிகச்சொல்லா னான்
தென்புடன் நடந்து மெள்ளத்திருப் பதியில்வந்து
வடமலையிலே வெங்கடேசர் பாதம் அன்பாய்
வாழ்த்தியே திருவடிவைப் போற்றிமிக நின்றேன்
அடிவாக எந்தனை அழைத்து சேய்
ஆதினாள் தென்பழனி ஆளுமுருகேசர்
கடவுளே சேவித்திருந் தாயே யிந்தக்
கன்னக்கோல் வந்ததேது காரணஞ் சொல்லென்றார்

## விருத்தம்

62. அரன்மகன் முரகர் பாதம் அன்புடன் பூசைசெய்து
வரமதுபெத்து வாழ்வோன் வள்ளல் வேலைச் சொன்னோடன்
புரவலன் சேனைக்கெல் லாம்புகழ்பெறச் சேவை செய்தான்
விரகமே செய்யும் ரத்தினி மெல்லிமேல் காதலானேன்

63. காதலே கொண்டு மெத்தகைப் பொருளுள்ள தெல்லாம்
போதவு மீந்துவிட்டென பொருளது போன றிடாமல்
தீதறு ரத்தின மங்கை தேன்மொழி யாசையாலே
மாதவா னின்பால் வந்தேன் வரமது அருள்செய்வாயே

64. தரு

வரமது அருள்வென்று வாகுசிங்க னாயக்கா கேட்டாயே
பரவிய உலகுதன்னில்ப் பாவம்பண் ணும்பண்ணா ரறியாயே
அரனேறி வாழ்வார்கள் வீட்டில்அன் பாய்க்களவு கொள்ளாதே
கரமீரா றுடையோன் முருகன்கண் டால்ச்சும்மாய் போகாதே

தவமே செய்நினைவார் தனமம்தண் ணிப்பந்தல்
வைத்திடுவார்
சிவபூசையள் செய்வார் வீட்டே சேராதே எட்டிப்பாராதே
பாவமே விளைந்து தென்றால் பரமேசுபர ராலுமாகாதே
அவமது வாராமல் நீயும்அதுக் கேத்தயிடம் பார்ப்பாயே

65. அழியாப் பதவிபெற பாரினில்அந் திரவெளியினில் அன்புடனே
வழியில்ச் சாலைவைப்பார் அவரைமறி யாதேநீ பறியாதே
விழியால் மதனோரிய விழித்தோன் விமலோன்முருகன் அறிந்ததினால்
சுழியா நகரமதில் தள்ளுவார் உத்தரவாதை யாய்புத்தி சொன்னேன்

66.அழகிய உலகுதனில் திருவாவினிங் குடியினில் மேவுகின்ற
மழைசேர் பூங்குழலாள் எங்கள்வள்ளி மணாளன் முருகேசர்
பழணா புரிதனிலே அன்னம்பகிர் வார்வீட்டே பாராதே
தழல்போலெரித் திடுவார் முன்னுந்தான் வருங்காரியம் யான்சொன்னேன்.

67. வளைத்தே அசுரர்களை வேலால்வதைத் தேவரைதனை பிளந்துருகத்
துளைத்தார் முருகரிட பாதந்தொழவே மிகவும் தொல்புவியில்
யிளைத்தோர் பசிதீர்வந் தோர்யினத்தோர் சூழ்நன் மையுடன்
கிளைத்தோங்கிய வருவார் அவற்கு கேடென்பது னீ நினையாதே

68. ஆழக்குளம் வெட்டிநண்ணாய் அன்பினி லருகினில்
அழகுபெற
வாழைப்பூந் தோட்டம் வைப்பார்மா னிலதன்னில்
வரிசைபெற
ஏழைச்சிறை விடுவார் கைக்கீ டெழுதின ஓலையைக்
கிழித்தாற்கு தோஷம் நினையாதே பாவந்துலை யாதேநீ
அலைவாயே

69.பல்லால்புர மெரித்தயீசன் பாதந் தினந்தினம் தொழுவாரை
பொல்லாங்கு சொன்னோர் வீட்டில்பூதப் பயந்துநீ நில்லாதே
நல்லோர் பெரியோரை மனதைநடுங்கத் திடுக்கிடம்
நினைத்தோர்தன்
யில்லறந்தனை புகுந்துகண் ணுக்கேத்த பொருளெல்லாம்
எடுத்திடென்றார்

விருத்தம்

70. பார்தனை அளந்தமாயன் பரிவுடன் எனக்கு புத்தி
நேருடன் சொன்னா ரிந்தநெறி தவறாதே யென்று
கார்குழல் ரத்தின மங்கை காதலி ஆசையாலே
சீருடன் பொருள்கள் தேடசெகத் தினில்புறப் பட்டேனே.

71. தரு

வந்தே திருவள்ளூர் வழியே அந்த மாமதிளுங் கோபுரமு
மண்டபமுங் கண்டேன்
எந்தன் வினையை விட்டகன்றென யனியெது தாழ்வுமில்லை
யென்று என்மனம் - நினைந்தேன்

செய்தேன் மொழியாளாசையாலே எங்கள் செவ்வேள்
முருகர்பாதம் - சேவிக்க மறந்தேன்
கந்தன் தனையளித்த யீசன்கழுக்குண்ணமலை எந்தனிட
கண்ணெதிரே கண்டேன்

72. சம்பாதி தேவரைனான் கண்டேன் நண்ணாய்ச்
சாஷ்ட்டாங்க நதெண்ட நிட்டுமோஷ்ஷ
சேதிகேட்டேன்
வம்பா போவென்ற வருவைதார் அவர்
வண்மையுடன் பின்னையும் உண்மையோண்ணு
சொன்னார்
அன்பான கூர்விழியா ளாலே எங்கள்
ஆறுமுக வேலோனை அன்பினால் நினைந்து
நம்பாமல்ப் போனத்தி னாலே யிந்த
னாத்திசையில் கள்ளளென்று கீர்த்திபெத்
தாயென்றார்

73.தருமநீதி பகர்ந்த தையல் சொல்ல
தன்னிலே மனமெலிந்து எண்ணியே னினைந்து
பெருமூங்கில் மலைவழி வந்தேன் அங்கே
பேசரிய மலைமருந் தீசரைனான் கண்டேன்
கருவிணையள் தானதையு மததென்னான் கண்
காஷ்சியானேன் யெனபங்கில் மிக வாழும்
அருமைசேர் பழனி முருகேசர்
அவரன்பு தனைவைத்து னான்தென்புட னடந்தேன்

74.வில்லைப்பதி தன்னைநாடி வந்தேன் அங்கே
வெள்ளைவிடை மீதில் திருக்காயீசரைக்
கண்டேன்யென்
அல்லல்வினை யானதையுமத் தேன்அந்த அம்மை
குயிலாள் உமையாள் உண்மையென்று சொன்னாள்
கல்லைப்போல் நெஞ்சுடையார் மேலே நீ
காதல் கொண்டுவெகு மெத்தபாதகங்களானாய்
செல்லத்துரை யீசன்கழுக் குண்ணம்மலை
செல்வரம் பனாதரைநான் கண்ணினெ திர்கண்டேன்

75. மண்டலத்துக் கழகான நாடு எங்கள்
வள்ளல் விரட்டேசர் உள்ளமகிழ் நாடு
எண்டிசைங் காக்குஞ் வயித்தி ரெட்டி
என்னாளுமே வாழ்ந்து யிருந்த வளநாடு
அண்டினோர்க் குத்தானஞ் செய்யுஞ் செட்டிஎங்கள்
அய்யங்கார் மகிபாலன் அன்பு செயும்நாடு
தண்டமிழ் குடை தருமனோடு ஓங்கித்
தழைத்திடுந் திருவதிநாடு தேடி வந்தேன்

76. மதிகொண்ணை வில்லையை யணிந்த யீசர்
மாபுரத்தை எரித்ததோ மன்மதனைக் காய்ந்தோர்
அதிக விரட்டேசர் தானே அவர்
அன்புதனை வைத்துசில அறிவுகள் பொதித்து

விதியும் பயங்காரணமும் அல்லால்
விமலனைப் பெத்தெடுத்த வெளியு மறியாது
பதிபுகழ் செல்வமும் அருள்வார் எங்கள்
பழணிமலை முருகேசர் பாதந்தொழு மென்றார்

77. நம்பினே னின்பாதந் தன்னை யினி
நடந்தேன் சிதம்பரத்தை னான் மனத்தி லெண்ணிக்
கும்பனோர் முலையா ளாசையாலே எங்கள்
கோத்திரத்தில் செய்ய வினைமாத்திட
வேண்டெண்ணி
அம்பலத்து ளாடுவாரைக் கண்டேன் னான்
ஆதினாளாய் காளியுடன் வந்துபுரி யீசர்
செம்பவழ வாய் திறந்து சொன்னார் அந்தச்
சீகாழீச்சட் டைனாதர் தன்னைச் சேவியென்றார்,

78. சீகாழிச் சட்டைனாதர் தன்னை னான்
சிந்தையில் மிகநினைந்து அஞ்செழுத்து மோது
நீயாரென் றுறென்னையவர் கேட்டார் அய்யா
னேராக னான் உகந்து சீராயு ரைத்தேன்
தீராத வினையை அகத்தும் அந்தத்
திருவாவினங் குடியில் முருகேசர் தாளை
ஓயாமல்ப் பூசை செய்வாற்கு னான்
உத்தபணி விடைபண்ணும் பத்தன்னான் னென்றேன்

79. பணிவிடைப் பத்தனென்று சொன்னேன் வெகு
பஷ்ஷிமுடன் எந்தன் மேலஷ்ஷம் தயவாகி
துணியவே மனமெனக்குச் சொன்னார் யிந்தத்
தொல்புவியில் நல்லோரைத் துடந்து வருங்காமம்
பிணிகள்பல பாவமும் கத்தும் அய்யா
புள்ளிருக்கும் வேளூரில்ப் புனிதனருள் பாலர்
அணிவிரலு மிவண்யடியுங் கண்டு யெங்கள்
ஆறுமுக வேலோனை அற்சனை செய்யென்றார்

80. புள்ளிலிருக்கும் வேளூரை வந்தேன் அங்கே
போதவே வினைதீர்த்த சுவாமி பாதங்கண்டேன்
உள்ளருக்கும் விளையள் விட்டோட ஓதினேன்
அஞ்செழுத்தை உண்மை மிக வாக
வள்ளல் உகந்தெந் தனுக்கு உரைத்தார் அந்த
மாகனகம் வேணுமென்று வாகுசிங்கா னீகேள்
தெள்ளு தமிழ் தெரிந்தாற் குதவி அந்த
திருவாரூர் தியாகராயர் தன்னைச் சேவியென்றார்

81. இசைந்திடு நத்தமிழ்க குடையாளன் அய்யா
யெல்லோர்க்கும் நல்லுதவி செய்யும் உபகாரன்
வசந்தமென் னாளும் ஆடுமம்மாள் நகர்
வாழும் அய்யங்கார் செட்டிமன்னன் பூசை செய்யும்

அசைந்தாடுந் தியாகரை னான் கண்டேன்
அவரவருள் கொண்டுயானு மெத்ததிரள்
பொருள்கேட்டேன்
கசிந்திடமான ரத்தின மங்கை மேல்க்
காதல்கொண்ட வாகுசிங்க னாயக்கா கேளென்றார்

82. ஆர்சொன்னா ருந்தனுக்குளவு அந்த
னாளினில் சுந்தரர் செந்தமிழ்க்காக
காரிருள் பாவைக்குத் தூதுக்கு
கெனநடந்து வாசல்படி தனிலே நின்று
பாரிலுள்ளோர் தானகைக்க நன்றாய் எழில்
பாயுந்தலை காணியும் பண்புடன் சுருட்டி
நீர்தான் சுமந்துக் கொள்ளுமென் றுகன
நிஷ்டூரமாய் தலையில் வைத்தாள் காணென்றார்

83. நச்சரவும் பூண்டு மெங் கழுத்தில்
நன்றாக வெள்ளெருக்கை என்மார் பணிந்தேன்
பச்சத் தவலை தன்னைக் காம வைத்தேன்
பாடியாடிக் சுடலையில் கோடினா7 ளிருந்தேன்
பிச்சைக் கிததிர்ந்து யோர்ந்துண்டேன்
வகை உன்னையெல்லால் சொன்னமெது செல்லும்
கொச்சைக் குறவள்ளியைக் களவில்க் கொண்ட
குமரேசரைத் தினந்தே ணடநீடு மென்றார்

84.அப்படி யெனதலை விதிப்பாடு அதை
ஆரறியப் போறார்நதி பார்வதியை யல்லால்
யிப்போது யான்சொல்வேன் கேளும் அய்யா
எங்குந்திரிந் துழன்று சங்கைகெடவேண்டாம்
வேற்ப்பிறை யும்வள்ளி மணவாளன் எங்கள்
வேலோனைக் கைதொழுதால் வாழவயதாவாய்
முற்பிறப்பில் செய்தவினை தீரும் நீங்கள்
முகியாமல் வாழவீரிப் பப்பசியாதே யென்றார்

85. சொக்கனாதர் மதிரையில் வந்தேன் நல்ல
சொக்கமாச் சுனாமினி சொர்க்கம் பெறலாமே
சக்கரை வாயிதழ் வல்லியாலே னான்
சற்ப்பமே அணிந்த பொருளதற் பரனைக் கண்டேன்
பொக்குஷப் பொட்டிகள் முத்து மாலை
பொற்சரிகை யிட்டு நெய்த பட்டு வண்ணச் சேலை
பக்குவத்துடன் களவு கொண்டு பழனிப்
பட்டணம்போய் சேர்வென்று கெட்டியாய்
நினைந்தேன்

86. கவி

மட்டாருந் தேன்பழனி முருகர் தன்னை
மலர்த்தாளை வணங்கி நித்தம் கிழந்திபாமல்
கட்டாணி முத்தான ரத்தின மங்கைக்
காதலி மேலாசைக் கொண்டு கருக்குலமேவி

கோட்டாடத் தலை மீதில்க் கூடையாட
கூலி யாளரைப் போலே வையகத்தில்
பிட்டுக்கு மண் சுமந்த சொக்கர் னாட்டில்
பெருமையுடன் களவு கொள்ளப் பிறப்பட்டேனே

87. மதுரைப்பதி தனிலேநடக் குறவாய்மொழி வளமைகள்
கேட்டுக் கொண்டேன்
கதிரோன்வெடிந் தமன்பு அங்குக் கால்க்கயி அலம்பிக்
கழுகிக் கொண்டேன்
உதிரப்பிட் டுக்காய் மண் சுமந்தோ ரடியாகிலும்
பிரம்பாலே
அதிரப் பட்டுகொண்டு ஓடி அழுதிடுஞ் சொக்கரை யான்
தொழுவேன்

88. தொழுதுனான் வரும்வழியில் அங்கொரு தோழன்
சித்தாண்டிப் பையலவன்
அழுதுக்கொண் டிருக்கையிலே னான் கண்டறிய
வுறவுபோல் வரவழைத்து
பொழுதுடன் கடத்தெருவே வந்து பொரியுங் கடலையும்
அவலுடனே
பழுதிலாமாம் பழமும்தருகப் பாங்குடன் வங்கண மாக்
கிக்கொண்டேன்

89. அந்திக்கடை பாத்தேன் யிருக்குற ஆரபாரங்களது
பாத்தேன்
சந்தைவெளி பாத்தேன் பையலுடன் சைகையும்
மெய்கையும் பேசிக்கொண்டேன்
செந்தலை உடும்புகண்டேன் சங்கஞ்செடி
யிலேவளைத்து நான்பிடித்துக் கொண்டேன்

90. கூடிக் கொண் டிருவருமாய் கோட்டைக் கோபுர வாசல்
ஒலிமுகத்தில்
யீட்டிது பாக்கிக் காறர்யிரு னூறாயிரம் பேரைக் கண்டேன்
தீட்டிய அம்புடை யோர் ராணுவர் சிலசேவு கரையான்
கண்டேன்
தாட்டிக ராணுவரைக் கண்டுதயங் கித்தயங்கி னான்மயங்கி
விட்டேன்

91. ராசாதி ராச துரைராச மன்னவர் புடைசூழத்
தேசாதி தேசம் ஆளுந்திர வியசம்பன்னன் அரமனையில்
ஆசார வாசல் சேர்க்கஅழகு சிங்கமனா யக்கர்தான்
பேரரசன் கொலுவிருக்கம் ரத்தினப் பொற் சிம்மாசனந்
தனைக்கண்டேன்

92. கண்டேன் மனமகிழும் துரைக்காவல்க் காறா மறவருடன்
ஒண்டிச் சேவுகளாம் ஒருவன் ஓடிவந்து உறுதிபெற
அண்டிதனை னோக்கி நீதான் ஆரெனவே வந்தார்ப் பரித்தான்
பண்டித ராமய்யன் வாசல் பாரியக் காவல்க்கார ரென்றேன்.

93. அப்படியான் மொழிந்தேன் அவன் கேட்டாமனை
வாசலப்ப தனமென்று
மெய்ப்புட எந்தனுக்குப் பாக்குவெத் திலையும் யொத்த
திரளாய்
ஒப்புடன் அவனளித்து வரறதை யுபசரித்தேன்
வெகுனேசம் வைத்துக்
கொப்பனவே யெழுந்து கோட்டைக் கொத்தள வாசல்
நடந்தனனே

94. நடந்திடும் அதின்பிறகே மூலையில் கெவுளிகள்
நாலுமூலையுந் தானெழும்பி
வடதிசைக் கிழக்காக மூலையில் வாழ்கதிரோன்
பதிமுன்னாக
விடமுண்ட தலைமீதில் ஏறுவன வெண்மதியோ னவன்
தன்னாளில்
அடவுடன் பல்லிமொழியக் கேட்டது அவதரியா மலே
போய விட்டேன்

95. போந்தேன் மனமகிழ் பொழுது வெடிய னாலஞ்சு
நாழியிலே
னாந்தான் விலைமாதர் தெருவில் நலமுள தேவடியாள்
மனையில்

சேந்தேன் படுத்திருந்தேன் கிழக்கே செங்கதிரோ
னுமெழுந்த பின்பு
ஆய்ந்தேன் அவள்மனதை னானும் அங்கே பகல்மட்டா
யிருந்தேன்

96. யிருந்தேன்அய்யாறும் சூரியன் எழுந்தகுட திசைஅடைந்
தபின்பு
மருந்தெசை யிலெடுத்தேன் அஞ்சனமய்
யைநெத்தியிலிட்டுக் கொண்டேன்
அருந்தேன் மொழியாள் தன்ரத்தினி அவள்மேலா
கையை நினைந்துக் கொண்டேன்
நினைந்தேன் களவுகொள்ள மதுரைத் தெருவிலே
வந்துனா னின்றேனே

97. நிண்ணெ நிலைபாத்தேன் அங்கே பாத்தேன்வெகுசீர்
பாத்தேன்
கொண்ண மதிமங்கை தும்பைகூட அணிந்திடும்
கோ மானார்
அண்ணல் அருள் பாலா வேரடியினை அனுதினம்
போத்தாமல்
எண்ணைப் பசைமினுக்கும் ரத்தினி ஏந்திழையால்க்
கள்ள னானேனே.

## 98. கலி

வெடிய வொருனா ழிகையில் கயிலைநாதா
வேலைசெய்ய வேணுமென்று கூலியாளாய்
கடிய வரு மதுதனிலே சயனம் நன்றாய்க்
காணாமலி ருந்ததனால் காஷ்சி கோடிகோடி
தடுக்கப் பாரு பதிரே குறுக்கை
தாவக்குஞ் சுமுயல்குதித் தொங்கும்படி யினாலே
அடியளப் பட்டசொக் கருடம் துரைனாட்டில்
அன்புடனே களவு கொள்ள ஆகினேனே.

## 99. தரு

மங்கை மீனாஷ்சி பங்காசெக் கர்அவர்
மதிரைப்பதி தனிலேவந் துசந்தில் நின்று
அங்கிரவில் பாதினேரங் கன்னியிந்த
அண்ட பிண்ட மானதும் அசந்த நேரறியச்
செங்கலை எடுத்துக் கையில் வைத்துனான்
சிக்கெனப் பிடித்துனான் தக்கதா யிருந்தேன்
கங்கையிவல் பொங்கி யெழும்பும் போல அந்தக்
கல்லிரண்டும் துள்ளிவீழக் கண்ணினெதிர் கண்டேன்

100.கண்டுனான் மனமகிழ்ந் தெழுந்து அய்யா
கையினால் சித்தாண்டிப் பய்யல் யெழுப்பி
மண்டலம் புகழுந் சொக்கலிங்கன் அந்த
மகராசன் வீட்டினில் வங்காறுப்பொட்டி

கொண்டுனான் களவில்ச் சென்று வல்லிஅந்த
கோதையாள் ரத்தின மங்கைபா தத்தினில் வைத்து
கொண்டு நீ வேணுமென்று சொல்லினான்
சிக்கேன் எழுந்து கூடல் சொக்கரை நினைந்தேன்

101. செக்கர் வாழுங்கோவில் மதிளண்டே அய்யா
சுத்திக்காற்குந் தலையாரி பத்துப்பேரைக் கண்டேன்
மிக்கவில் லையஞ்ச வளம்யீட்டி நல்ல
வெள்ளிக் கட்டுவெண் டயம்கலின்கலி
லென்னஅன்டை யிலேநின்று
கொக்கரிக்க சக்கிலிக்கொம் பூத அய்யா
கொத்தவர்கள் மெச்சதம் மட்டங்கிடு கிடுகொலிப்ப
அய்யா திக்கெனப் பயந்து தவழந்தோடி அந்தத்
தெற்குத்தெரு வாணியர்தம் செக்கிலொ ளிந்தேனே

102. ஓடினா னொளிந்ததே தொக்கும் வாற்தை
உண்மையாகச் சொல்லுகிறேன் வண்மையாகக்
கேளும்
தேடிமன துள்ளமா ராய்ந்து நண்ணாய்த்
தெரிந்து தமிழை ஏட்டில் வரிந்துமைய் யையிட்டு
பாடிவரும் புலவோரைக் கண்டுனான்
பதுங்கும் உலுத்தர்போல படைதிரளைக் கண்டு
வாடிமுகங் கருகியே செக்கு
வலப்பைக் குள்ளாகனான் கலங்கிக் கொண்டேனே

103. கலங்கு மனதெப்படி யானால் அந்தக்
கடலில்ப் படந்தபாரட வில்ப்புகழும்
யிலங்கைக் கதியுமானேன் அடர
யிந்திர செயிததொழுவன அந்திரத்தில் வாழ்க
அலங்கத்தில் ரத்தின மிட்டகோட்டை அதை
ஆண்டவன் ராமன்கையால் மான்றுபோதன்று
பிலங்கக்கழு மாசமாதர் அங்கே
பேதித்தரப் போலுடலம் வேதித்து நின்றேனே

104.அங்கிருந் தெழுந்து மெள்ள எங்கள்
ஆறுமுகவே லோனை அன்பினால் அழைத்து
திங்களணி சங்கரர்தன் பாலர் எங்கள்
திருவாவினங் குடியில் வருமயி லேரவர்
எங்கும் புகழ் மதுரைப்பதிக்குள் னான்யிரவிற்யிதி
நேரத்தில் திருடத் துணிந்தேன் எக
பங்கில் வந்துசத்து நேரமிங்கே
பாளையக் காறர்அறியா ஊரைச் சேர நில்லும்

105. கவி

சேரவே நில்லுமென்று சிவன்மகன் முருகர்பாதம்
நேருடன் பூசைசெய்து நெஞ்சினில் மகிழ்சியாகி
வாரணி முலையாள் ரத்தின மங்கையால் கள்ளனாகி
தாரணி சொக்கலிங்கன் தன்மனைக் கேகுமன்றே

## 106. தரு

தென்னா பலர்புகழு மதுரைத் தென்னந் தோப்பினில்
வடபிறமாய்
நண்ணாயச் சித்தாண்டி பையல்னானு மவனுமாய்க் கூடிக்
கொண்டு
கன்னார்க குருவண்மைத் துன்னகாங்கய பத்தன்
தெருவழியே
முன்னாக வந்தபழணி முருகரைக் கையால்த் தொழுதேனே.

107.முருகரை அடிபணிந்து கோட்டைமூலக்
கொத்தளமதிள்க் கிழக்கே
பரிவுடன் பதிவிருந்து அய்யா பையல்கையில்
மருந்தெடுத்து
கரும்பூனைக் கண்மைஉடும் பின்காலிலே தடவிக்கவுத்
தைவிட்டு
மருமலர் குழலாளக்கே பொருள்தேட வந்தேன்மதிள்
மேலே நின்னேனே

108. ஏறியே மதிள்மேலே பையல் கையிழுத்தே மார்பினில்
அழுத்திடவே
சீறியே அவனழுதான் வாயில் சிறுபயிர் கடலை அவலை
யிட்டேன்
கூறினேன் அவன்தனக்கு பொன்னுங் குல்லாத தலைக்கு
கொடுப்பனென்றேன்
வீறியே மிக நடந்து அரமனை வீட்டின் பிறகே நின்றோமே

109.பிறம்பே மதிளருகே பையலுடன் பேசியோராசியம்
பண்ணிக்கொண்டு
திறமுள கல்லேவி நேயிகூடத்தே வாங்கிக்
கண்மையுடனே
நிறமுள கன்னக்கோ லில்தடவி நேராய்சுவர் தனில்
வைத்தேனே
குறமகள் மணவாளன் குருபரர் குமரன் வேல்பாய்ந்ததும்
போலத் துளைத்தேன்

110.தேனுழை நரிக்கொம்பு திறமுள குளிகையைத்
தலையில் வைத்து
னானேபுகுந் துவிட்டேன் அங்கே நவமணி ரத்தினங்கள்
எரியக் கண்டேன்
னானேஅதி செயங்கள் கண்டேன் சேவுக ராணுவர்
தாங்கக் கண்டேன்
னான்மிக பயந்துவிட்டேன் பழணித் தா னாள்முருகரை
வேண்டிக் கொண்டேன்

111.பொன்னியது கண்டேன் ரத்தினப் பூஷ்ணாதியளது
கண்டேன்
மின்னிய வேல்வாங்குக் கண்டேன் வெகுவிலை
பெறுகின்றநகை கண்டேன்

கன்னியர் கோயிலான வட்டுக்கட்டு வறகங்களது
கண்டேன்
சென்னியில் மதிசூடும் அரனார் சேவடிபோ லதுதான்
கண்டேன்

112. கண்டேன் மனமகிழ் பழணிக் கந் தருக்கொப்பாய்க்
கருதிக் கொண்டேன்
மண்டலம் புகழவரும் ஆதிமாயவன் கிறுபையை மனதில்
வைத்து
பூண்டரீகப் பதியாள் லக்ஷ்மி போதவே தய்யைப்
பொருந்திக் கொண்டேன்
வெண்டலை அணிமார்பன் அரனார் விளையாடு மதில்
மீது வென்றேன்

113. எண்ணிரு கோடியுகம் முன்னே யிருந்தோர் பெரியோர்
தெரிந்தரிய
புண்ணிய பெரியதலம் திருத்தணி பொன்னகர் தன்னிலப்
புதுமையுட;ன
கன்னியள் திருமுகத்தைக் குறவரைக் கண்டேபயந்து
கானகத்தில்
அண்ணே தினைப்புனத்தில் பதுங்கின அறுமுகர் போலே
னான்அமுந்திக் கொண்டேன்

114. அழுந்திய சித்தாண்டிப் பயலை அழைத்தே கையால
யிழுத்தேனே
எழுந்தேன் எட்டிப்பாத்தேன் அங்கேயிருந்தே மார்பால்
தவுந்தேனே
விழுந்தே படந்து விட்ட சொக்குப் பொடி வீசினான்வா
மேல வீசிடவே
வழிந்தே அழகொழுகும் ரத்தின மாணிக்கப் பொட்டியை
எடுத்துக் கொண்டேன்

115. மாணிக்க வாசகராய் பிட்டுக்கு மண் சுமந்தீசன்
மதிரைக்குள்ளே
ஆணிப்பொன் களவுகொள்ள நண்ணாய் ஆலித்துக்
கொண்டு மார்புக்குள்ளே
னாணிக்கொண் டேயிருக்கும் முலையாள் ரத்தின மங்கை
பாதத்துக்கு
காணிக்கை கொண்டு போறேன் பழணிக் கந்தனே
எந்தனைக்காருமென்றேன்

116. கந்தன் சீறூரில் வள்ளியைக் களவிலே கொண்டு
வருவதுபோல
சந்தோஷத் துடனே ரத்தின சாப்பளிப் பொட்டியை
எடுத்துக் கொண்டு

வந்தேன் மதிலோரம் கௌதமர் மனையினில் வாசவன்
வடிவான
அந்தஉரு வாகிசனியன் அடைத்துக் கொண்டான்
வழிதடுத்துக் கொண்டான்

117.தடுத்தாளக் கொண்டாரே சுந்தரர் தனக்காயத் தூது
சென்றாரே
துடுக்காச்சீர் படைத்தோன் முருகர் துரையுடன் சலுகை
வலுமையுடன்
எடுத்தேன் திருப்புகழை அதிலேயிருப்பது கவியொரு
னொடியில்ச்சொன்னேன்
உடுத்தார் கலைநெகிழ கையில் உதவின உதவின
உதவினரே

118.உதவிய மயிலேறி முருகர் ஓராறுமுகமும் நேராக
சதமிக வாறாரென பல்லிகளிக்க யிடதுபுறம் தனியபலபல
புதன்மூலைக் கெவுளி சொல்லப் பயமுமனமு மிகக்களி
கூர்ந்து
சதகோடி காலம் பயலே சகலமும் அனுபவத்தி
ருப்பமென்றேன்

119. தடுத்தார் யெனவே பயலைத் தவந்துகுனிந்து மெள்ள
பார்க்கச் சொல்லி
கடித்திடு மயிருள்தனிலே பூனைக்கண் ணிலேகூட்
டினமைய்யை யிட்டேன்
வெடித்த சொல்லுரைத் திடுவோம் தமிழைவின
வியதல்லோர் வருவதுபோல
எடுத்தடி னோகாதே வந்து எதுத்த பூனை
குதித்தது போலே

120.குதித்திடுந் தொனிகேட்டு னானுங்குளுந்த தயவாய்
மனமகிழ்ந்து
கதித்த சொல்லுரைத் திடுவோன் அய்யங்கார்
செட்டிபூபன் அவற்கன்பாகப்
பதித்திடுந் தமிழ்ப் பொருளை பாடி பரிசுபெறுகின்ற
பாவலர் போல
ருந்திக்குடந் தனிக்குதாவி னானும் நெஞ்சில் மகிழ்ச்சி
கொண்டு நடந்தேனே.

121.நடந்தேன் கன்னக்கோ லால்அறுத்த னாழிகை
வாசலில்த் தான்புகுந்து
கடந்தேன் அகிளதனையே பழணிக் கந்தரே எந்தனைக்
காத்ததனால்

தடந்தனை அறியவென்றேன் மின்னுணிதன் கண்ணில்
கூட்டினமையை யிட்டேன்
துடந்தேனது வழியே களவுக்கு துஷ்ட்டவிக்கிற மாறகத்
துரைனானே

122. தாட்ட விக்கிரமாற் கமன்னறே அழகிய சொக்கலிங்க
னாயக்கர்துரை
வீட்டில் மாட்டாருந்தேன் பழணி முருகர் வல்லமை
கொண்டுனான் மதிலேறி
பட்டாலை சூழ்ந்திருக்கும் மாணிக்கப் பவளப் பெட்டியை
எடுத்துக் கொண்டு
கட்டாணி முத்து முகத்தாள் ரத்தினி காதலிக்கே
கொண்டுபோறேனே

123. காதலி ரத்தினியே யிருந்தகடவுள் குமரர் கிருபையினால்
ஆதனுற்கே உதவும் சொக்கஅழகு லிங்கம னாயக்கர் தான்
சீதளமதி முகத்தான் அரமனை சிங்காரப் பொட்டியை
யெடுத்துக் கொண்டு
பாதகந் தனையாத்தும் பழணிப்பதி தனில் வாழ்க
நினைந்தேனே

124. கலி

நினைத்திடும் அன்பர் தன்னை நினையா மலிருக்க நோய்கள்
மனதினில் கிறுபை வைக்கும் வடிவேலர் பாதம் போத்தி
கனக்கவே பூசைசெய்து களித்து னான் வாழ்ந்திடாமல்
தனத்தினமே யாசையான தையல் மேல் மோக மானேன்

125.தய்யல்மேல் மோகம்னான் கொண்டேன் எங்கள்பழணி
யாளும் குமரனை நினைத்து
மெய்யுறவாய்ப் பூசையள் செய்து அய்யா மேதினியோர்
கொண்டாட வாழ்ந்திருந்திடாமல்
கையினாலசை கைகொண்டழைத்து அந்தக்கா
தலிரத்தின மங்கை தாதகத்தில் சிக்கி
பையிரவு மூணுபத்துச் சென்றுநல்ல பாற்கானவெந்த
பின்பு மேற்கே நான் நடந்தேன்

126.நடந்திடும் வழிதனிலே தானே அய்யா
னாயகிரத் தினமங்கை தாயுடன் பிறந்த
மடங்கநல்ல கொடியிடை மாது அந்த
வஞ்சியார் பெத்த அப்பஞ்சி தங்கமுத்து
குடம்போல் தனத்தின் மேலே கமழ் குங்குமம்
கலயத்தூரி வீசிப் பொங்க முடன் வந்தாள்
தடந்தனில் அவள்னான் கண்டு ஒரு
தண்மையேனுக்குச் சொன்ன உண்மையை
நீர் கேளும்

127. பல்லைத் திறந்தவள் காலில் வீழ்ந்தேன் அந்தப்
பாவிமகள் ரத்தினமங் கைச்சேதியைச் சொல்லெனது
வில்லைப்போல நுதண்சுமந்து அந்த
வெள்ளாட்டி யெந்தனுக்கு யில்லா துரைத்தால்
மல்லிகை மலரச்சம்மூடியாள் அவள்
வன்ன முலைமீதில் மஞ்சள் வாடைதனைப் பூசாள்
அல்லும் பகலுன்னுடைய சொல்லு சாமி
ஆறேழு மாதமாய் வேறேநின் வென்றாள்

128. விறலமத னவாளி அயந்து னாலேகன
விடாயது கொண்டுவலவி மிகவருந் தினாளோ
மறந்தாளோ னான்சொன்ன சொல்லை
வாறேனென் றுசொன்னகேடு வாராமல்த்
தப்பினேனோ
குறமகள் வள்ளி மணவாளன் குமரேசர்
கிருபை வைத்தகூனற் தயவாலே
திறமுடனே யான் மிகச் சென்று அந்த
திண்டுக்கல்லு மலையோரம் தண்டுப்பாதை
கண்டேன்

129. தண்டுப்பாதைக் கிழக்குமூலை தனம்காவல்ச் செல்லத்
துரைவல்லக் கொண்ட னாட்டில்
அண்டிக் கொண்டு அதுவழி வந்தேன் அந்த
ஆயக்காற மாயக்கள்ளன் காயக்கமாய்க் கண்டு
அவன்

ரெண்டுபண் ணியேந்தனை யழைத்து அவன்
வெஞ்சினத்துடன் இருக்கண் சிவக்க நின்றான்
உண்டென் றோர்குதவு முருகேசர் அநத்
உதத்திருந்தாள் தன்னைப் பத்தியாய் நினைந்தேன்

130. நினைத்த போதெங்கள் முருகேசர் அந்த
நீலமயிலுங் கடம்பும் பண்ணிரெண்டு தோளும்
கனத்த வேல்கையு மால் முகமும்
கண்களுஞ் சதங்கைகள் கலகலென காலும்என்
மனத்திருந் தயாதீர் அந்த
வள்ளியுந் தெய்வானையுடன் வந்தெதிரே நின்றார்.
சினத்துக் கொண்டிருந்த ஆயக்காரன் அவன்
சிந்தைதான் கலங்கி யெந்தவூர் நீரென்றான்

131.கண்டபோதே கண்கள் களிகூரும்
கரதினால் கேட்டவற்குத் தோஷங்கள் தீரும்
வண்டாடுஞ் செங்கழிணி ரோடை அகில்
வாசஞ் சந்தணஞ் சவாது வாசனைகள் வீசும்
தண்டரள் முத்துநவ ரெத்தினந்தான் கொழிக்குந்
தெருத்தோ றுந்தன் மந்திர சாலை
உண்டுனான் களித்து மிக வாழ்வோன்
ஓதரியதேன் பழணிவேலரு ரென்றேனே

132.அருக்கா தேயெனக் குரைசின்ன சீமை

ஆரதனக் கைக்கொண்டு போரப்பேரெனக்குச் செப்பும்

பெருக்காறுஞ் சடைமுடி யீசர் அந்த

பெத்த குமரேசருக்குப்பூவொடுக்கும் பெட்டி

தருக்கான சேதுரகு ராமன் மறவன்

தானனுப்பு முச்சிதத்தை நீமறி கலாமோ

ஒருக்காலே வக்கணைக ளிட்டு ய்யா

ஓலையும் யெழுதிதந்தார் உண்மை பாருமென்றார்

133.பாரென்று சொன்ன போதரியக் காறன் அவன்

பயந்து மிக நடுங்கி தயங்கியே நின்று

ஆருயிர் கணீசநருள் அன்பான் யுகந்தருள்

ஆறுமுக வேலருக்கு அன்பான பொட்டி

தாரிருக்கும் சேதுறகு னாதன் மறவன்

தானனுச்சி தமாய்தந் தையான் மரிக்கபோமோ

வாரிருக்கு முலைரத்தினி யாள் அய்யா

வாகுசிக்க னாயக்கா னீ வந்து வந்துரைத்தான்

134.ஏகுமென்ற ரைத்தபோது யானும் நன்றாய்

எழுந்து நடந்து மிக யிருமென்று சொல்லி

மாதுகுற மாதுவள்ளி பங்கனார் எங்கள்

பழணி முருகேசர் என்மேல் பஷ்ஷமதி

னாலே என் னாகமனங் களித்து மயிலேறி வந்து
ஆயக்காரன் உபாயதனம் செய்தார்
வேகமுடன் மனதிலுள்ள தன்னை
வெடச்செந்தூர் பாதைநடந் தோடிவந்து நிண்ணேன்

135.புலிமாதர் கண்களித்து நல்ல
பொற்கலைகள் சித்திரத் தொழில் போதிக்கும்
விேனோதன்
அலிமான பூசன் உதாரன் எங்கள்
அய்யங்கார் செட்டி மக ராசன்
குவியுங் கொங்கை மங்கைமண வாளன் அவன்
கோத்திரத்தை ரெஷ்ஷயும் குமாரி ருதானை
கவிபாடிக் கொண்டுனான் மகிழ்ந்து பழனிக்
கந்தரை எந்தனிட கண்ணினெதிர் கண்டேன்

136.ஓடியே நாலுரண்டு காதம்
ஓதரிய விருப்பாஷ்சி வீதிதனில் வந்து
வாடியுடன் தேத்தையுங் கடந்து அய்யா
வாகுசேரும் ஆயக்கொண்டன் காவலுக்குள் சென்று
தேடிவந்த பொருளையுங் கொண்டு
யிப்பதிருவா வினங்குடியே பரிவுடனே சென்று
கூடியந்த தையலை அழைத்து அந்தக்
கோதைய ரத்தினியுடன் சேதி சொல்லு மென்றேன்

137 கலி

சேதியே சொல்லுமென்று செப்பினேன் பையலோடே
வீதியில்ச் சென்றே அந்தமெல்லியார் தன்னைக்கண்டு
காதமாம் விழியினாள் கனக்கவே னோகுங்கொண்டு
ஆதியில் வாகுசிங்கம் அன்புடன்வந் தானென்றான்

138. அன்புடன் வந்தானென்று அறியவே சொன்ன பையல்
சன்னதக் களிகள் கூர்ந்த தயிருடன் சோறுமிட்டு
வனம்மோ மனதிலின்ன வாகுசொ சிங்க ராயன்
என்மனங் களிகள் கூர்யியலுடன் உரையு மென்றான்

139. உரையென முன்மொழிந்தால் ரத்தினி வோதவே
நீதான் கேளாய்
யிரவுனூறு கங்களாகி எழுடை வாகுசிங்கம்
பரவிய உலகுத் தன்னில் பணந்திரளாகக் கொண்டு
விரவியே னின்பால் வந்தான் விளம்புவா னிந்தச் சேதி

140. விளம்பியே மொழிந்தாய் தம்பிவிறல மதனவாரி யாலே
அளவில்லாத துயரங் கொண்டேன் ஆகமஞ் சிந்தை வேறாய்
உளமது னொந்தே யிந்த ஓராறு மாதமுற்று
யிளமுலை மதனைச் சேர்யிமைப் பொழுதழையு மென்றார்

## 141. தரு

சித்தாண்டி ஓடிவாகுசிங்கன் தனைக்கண்டு அழைத்துக்
கொண்டு ஏகுகின்றார்
ரத்தினி ஆயிர்த்துக் கொண்டவள் அமளியுடன் யிழைத்த
னூலிடையாற்கு
நன்றாய் எழுந்துவளந்து மருக்கொழுந்து தனைதழைத்திடும்
பழனியாளும் தனம்தேசிகன்
தன்னூரில் பிழைத்திட வேணுமென்று அனுப்பினபொற்
பொட்டிவாக கண்டு புரிந்தனனே

142. அந்திக்குளி குளிச்சாள் மஞ்சள் அகில்வாடைகள்
பூசிக்கொண்டாள்
சுந்திரமா மணியும்சல் லாச்சேலையை நண்ணாயுடுத்
திக்கொண்டாள்
கொந்தள் ஓலையிட்டாள் ரத்தினிகுட மணித்தாவடம்
பூண்டுகொண்டாள்
சிந்தூரத்தில் தம்நெத்தியில் சிறுகப்பணம் போல்
தரித்துகொண்டாள்

143. அன்னக்கொப் புமிட்டாள் காதுக்கான பூஷணந்தரித்துக்
கொண்டாள்
வன்னப்பூ முலையாள் ரத்தினமா லையை அழ
காய்ப்போட்டுக் கொண்டாள்

சின்னச்சித் திடைக்கே ஒட்டியாணம் செம்பொற் தகட்டால்
மேந்து கொண்டாள்
கன்னச்சிலை நுதலாள் ரத்தினி காதலிதாய் கோட்டா
லையைக்கேள்

144.கோட்டாள் போலமுகமும் அரமனை கூடாரமேடு
தோட்டைக் கூன்முதுகும்
காட்டாமைக் காலும் வண்ணான் கழுதைமேல் வரும்
பொதியழகும்
பூட்டியபுகைக் கோலும் சுங்கான் பூண்டு ஒருபுறம் பொன்
தூவும்
தோட்டாமைக் காறமாதர் தெருவுக்கு வாத்தியார்
தோணினாளே

145.தேரணிபொன் நெளிமார்பும் அதின்கீழ்
தொங்குமுலையள் யிருசாண்முழமும்
கோணிமூக் கழகும் குவளையின் குண்டுமணிகள்
போலவளைகளும்
ஆணிமுனைக் காலும் குறும்பாட்டு மயிலைப் போலத்
தலைமயிலும்
ஊனினதடி யழகையினித் தான் ஒருவராலுஞ் சொல்லி
முடியாதே.

146. ஒரு பிறந்தளந் திருக்கும் பாதிஊர்கள் அறுமுறுவின்
வுரையும்
யிருபிறம்பழந் துணியால்ச் சுத்தியிருக் கச்சேவிசை தப்பி
நேளரக்கேண்ணிடும்
பரிவுடன் பிடத்திடத்தே பாம்புபசி யிரைதிண்ண
கழுத்தது போல
அருவையா காசான் ரத்தினி ஆத்தாள் மகிமையைக்
கண்டானே

147.மைவிழி மோகினியாள் ரத்தினிமா தர்மகளிட
வரிசைகாண்
அய்யா வாறாரோ யெந்தன் அரியமருகன் வாராலோ
மெய்யா வாராரோ சத்தேவெள் ளையுஞ் சுள்ளையுமா
வாராரோ

148.அடிதையாள் தங்கமுத்துத் யிலிதங்க கச்சியுடனே
சொன்னாயோ
நெயி விளக்கால் வத்தியேத்தி நேராக யெதிர்
வைத்திடென்றாள்
வைத்த போதருகிருந்து வாய்மொழி மழலைச் சிறுதிரள்
உரையுமென்றாள்
மெத்த வேயிலைராகம் வீரகக்கவி களைப்பாடு மென்றாள்
சத்தெ மடிமிசில் சாந்துசரச உல்லாசம் பன்னுமென்றாள்
புத்தியள் தனைச்சொல்லிக் கிழவிபோ தகமாகவே
ஓதினாளே

149. ஓதினபல் வகையுங் கிழவிஉண் மையானதோர் வறம்மது
சேதிதன் னறியாமல் னானுஞ்சென்றே மெள்ள சீருடனே
கோதுநற் கனிமொழியாள் சந்தண குங்கும வாடையைக்
கூட்டியிட்டாள்
வாதுசேர்கொங்கை மின்னாள் ரத்தினி வாசலில் வந்து
நானின்றேனே

150.வந்தே நின்றேதான் ரத்தின மாக்கப் ராட்டியைத்தான்
யிறைக்கிக்
கந்தனுக் கனமான நல்லகாணிக் கை கொண்டு
வருவதுபோல
இந்திர ஞாலமெல்லாம் கைவந்தேந் திழையாற்கு
மனமகிழ்
செந்தேன் மொழியாள் முன்வைத்துத் தெண்டனென்றே
வீழ்ந்தேனே

151தெண்டன தெண்டனென்றுஅந்தத்தேன் மொழியாள்
தெந்திசைநோக்கி
அண்டையில் நில்லாமல் போபோ ஆறுமாத மாயெனைப்
பிரிந்து
தண்டது பண்ணினியோ ருந்ததாறு மாறுகள் பேசாதே
மண்டல மீதுரையும் குந்த மனிதருடன் சொல்லிக் காட்டு
மென்றாள்

152.சொல்லென்று நீயுரைத்தாய் பழனிச்சுப் பிரமாமணியர்
தானறிவார்
அல்லவேன் றெண்ணாதே மதுரை அழகிய சொக்கர
றிந்திடுப்பார்
வில்மதன் கணையாலே யிந்தமேதினி யெல்லாந்
திரிந்துழன்றுக்
கல்லுகள் கொடுவந்தேன் யென்னைக் கலந்து
கொண்டந்து யிருந்திடென்றாள்.

153. கலந்து கொண்டருவருமாய் யிப்பக்க மதனனும் ரதியும்
போலேகி
அலர்ந்திடு மல்லிகைப் பூப்பஞ்சணை யான பஞ்சணை
மீதுறையும்
தலந்தனில் பெரியதலம் சேவித்த தலங்கள்
மிகவேகிடைத் துதென்று
பலந்தனைப் பெத்தேனென் றுயானும் பாக்கியம் பெத்து
வந்தேனே

154. கலி

பாக்கியம் பெத்தே னந்தபழணி வாழ்முருகர் நன்றாய்
தேக்கிய புகழும் வாழும் செல்வமு மிகவே தந்தாய்
நீக்குனென் பாவமெல்லாம் நெஞ்சினில்க் கவலை யத்தேன்
வாக்கிய மொழியுஞ் சொக்கர் மலரடிதுதி செய்தேனே.

## 155. தரு

துதிக்கும் பழணிப் பதியாளும் அய்யா
துய்யகுமரேசரிட அய்யனரு ளாலேத்
திக்குதவும் அய்யங்கார் செட்டி அனை
தலைக்கிளை கள்வாழ்வென்று அன்புட னினைந்து
பதிக்குணந் தந்து மிகவே தான்செய்
பாவலற்கு மியாமல் அமர்ந்திருக் குமீயந்து
விதிப்பயன் தலையே முத்துனாலே அந்த
வெள்ளாட்டி ரத்தின மங்கைக் குள்ளாசை யானேன்

156.உள்ளனாள் னாமிருக்க வென்றாள் அய்யா
ஓதரியதென் பழணிவேலரை நினைந்து
கள்ளொழுகும் பூமலர் பறித்து அய்யா
கற்பூர தீபத்துடன் கால பூசை செய்து
தெள்ளா புகழ் ஞானம் வேதமோதி அந்தத்
தேவாதி தேவனை தெரிசினையள் செய்தாள்
வெள்ளை விடைமீதில் வருமீசன்
மேற்பாதந் துணையென்று வேறொன்றும் வாராதே

157.உத்தமயல் தந்தமோக வல்லி அவளோ
ஓதரியயான் திருனாளினில் எழுந்து
சித்திரப் பவளப் பொட்டியில் வைத்த
தீபரத்தின மாணிக்ககல்லிலொான் றெடுத்து

பெத்துசெட் டிகடையில்க் கொண்டுபோய் அவன்
பெண்புத்தி யினாலே ஒருவம்
பத்தன் முன் னாக அந்த விலைதாரு மென்றுரைத்தாள்
அவன் ஆயிரம் வராகன்மேல் நாலாயிரம்
பொன்னீந்தான்

158.அன்னநடை நவரத்தின வல்லி
அவளாதா ளியாகவே ஆரயிரஞ் செய்தாள்
பொன்னுலகை யாளாஞ் சொக்கலிங்கன் அய்யா
பூபாலன் தென்மதிரைக் கோபுரத்தில் வந்து
மின்னுபுகழ் மாணிக்கக் கல்லை நல்ல
மீனாஷ்சி யம்மனுக்கு மேற்பணிகள் பண்ண
துன்னுபுகழ் சேவுகர்க்கு ரைத்து அவள்
சேதி சொல்லி வீடுவாசல் கொல்லர்வசம் பண்ணார்

159. வாசக்கொல் லக்காறருக்குச் சேரவை எங்கள்
வாகனமுத்து வரதராசன் மகன் றங்கன்
நேசத்துடன் ஓடிமிக வந்து அய்யா
நீங்களென்னை யேனழைத்தீர் காரியஞ்
சொல்லென்றான்
தேசத்தை விரையிடப் போகாத தன
தீபரத்தின மாணிக்கக் கல்லெங்கே தாவென்றார்
ஆசைத்துலை சொக்கலிங்க ராயன் யிதோ
அனுப்பினார் கோபபேன் அருளுமென் றுரைத்தார்

160.அப்படி யுரைத்த மொழிகேட்டு நன்றாய்
அத்தனை பெரும்மனது மெத்தவே மகிழ்ந்து
செப்பிள முலையாள் மாதுரத்தினி அவள்
சிந்தை களிகூர் அதுவந்த தறியாமல்
மெய்ப்புடனே உக்கிறாணந் தன்னில் அந்த
வீட்டிருள் யிறங்கியே மெல்ல நடந்து
ஒப்பரிய கன்னல் வாசல்கண்டு அங்கே
ஒண்டிருக்க னான் விழுந்துஉதத் துடலானார்

161.ஒன்றாக நின்ற சிவனாதர் அந்த
ஓம்நமசிவா யருட உண்மையை நினைந்து
முன்னாகப் பின்முகஞ் செறித்துயிது
முருகருட செயலல்லால் தருகிறவ னாரோ.
நன்றாக மாணிக்கப் பொற்பொட்டி அய்யா
னான்வைத்ததைக் கண்டவன் தான் வைத்தது போல
சொன்னாப் போல்கொண்டு பொன்கள்ளன் அவன்
சூதனிலே கெட்டிக்காரன் சூதனென் றுரைத்தார்

162.வட்டப்பா றைமேலிருக்குஞ் சொக்கர் அவர்
மலரடிதான் வணங்கியே மிகவும் நின்று
பொட்டன நடந்து தெருவந்து யிப்ப
போதயிருபத்தாறு பேர்களுடன் சென்று

பட்டவற் தினர்கள் புடைசூழ அய்யா

பஞ்சணை மேல்வீத் திருந்து பா ருலகையாளும்

தொட்டவற் கதகத்துரை பாக்கிய வான்

தோராத சூரன்முன்னே தொழுதழுது நின்றார்

163.வந்துதோ மாணிக்கப் பொட்டி எங்கள்

வாகனகன் முத்துவரதப் பன்மகன் றங்கன்

அந்தமொழி கேட்டாள் விலக்கொல்லல்

அந்தரர் சிவ சிவா அழகுசொக் கனாதா

யிந்தப்பதி எமக்களித் தாயோ

யின்னஞ்சில காலமுமிருக்க நினைக்காயா

சுந்தரஞ்சேர்பாக்கிய சொக்கலிங் கன்அவர்

சொற்பெரிய சபைதனிற் பக்கமாக வந்தான்

164. பக்கமாக வந்தவர்கள் கூடி

பாரைஆண் டிரும்சொக்கலிங்க ராயர் பார்க்கு

சககுறவாள் கிரிகுளில்லாத யிந்தச்

சறபனை பண்ணியொருவன் தப்பிதமுமாக

தெற்குமதிர்க் கொத்தளத்தைச் சேர் அந்தத்

தேவடியாள் முத்துமங்கை வாசல்தனில் வந்து

சொக்குப் பொடி போட்டு ரொக்கப்பொட்டி அய்யா

சூதாகக் கொண்டுபோன கள்ளனென்றுரைத்தார்

165. கலி

உரைத்திடு மொழிதான் கேட்டுஉவகை யாள்சொக்க லிங்கன்
விரைத்திடும் பொறிபோல் பொங்கிவெகுண்ட
டெழுந்திரண்டு சொல்வான்
புரத்தை யெங்கைத் தெரித்த புனிதனார் தனைந்து
கரத்தையே முகத்தில் னோக்கி கருத்தினில்க் கோபம்
வைத்தார்.

166.கோபமே தியானமாகி கொடுஞ்சேனை முருவதாகிப்
பாவமே செய்வார் மொடாபஞ்சமாபாதகத்தோர்
னாவினால் சிந்தை செயிதநல்ல தென்பார்கள்போல
காவடமுல கையாளும் காவலன் கருத்தைக் கேளீர்

167. தரு

கருத்தினில் தயவு வைத்து பழனிக்கந்தர் தாள்தனைப்
போற்றி செய்யும்
பெருக்கவே உலகாளும் பெரியசொக் கலிங்கம னாயக்கர்
தான்
பொருத்த மதாகவே தான்பாதிப் போதஆளுங் காவல்
காறருக்கு
துருத்தம துடனேனாம் ஒருஓலை துடந்துஎழுதி
மெள்ளஅனுப் புமென்றார்

168.நடந்திடுஞ் சேதுபதி எங்கற்குரைத் தேவனார்
மறவனுக்கு
தடந்திகழ் வார்த்தை சொல்லி யிதற்குதன் தாமிதம்
பேசாமல்
கடத்தெரு வழியே வந்துகள்ளன் கன்னக்கோல் வைத்துக்
களவு செய்து
குடத்தோடே எடுத்துக் கொண்டு கோட்டைத் தாண்டிப்
போனவன் உன்னுடமனித நென்றெழுது மென்றார்

169. கவிவாணர்க் கெல்லாம் குடைகளிக்க அளித்திங்
காசினியில்
அபிமானங் காத்தான் மழவன் அரியலூர் தனக்கழகாக
புவிமன்னர் கொண்டாட வக்கணைபோத வோதியே
பொன்னோலை
செவியினி லுரைத்திடவே யிந்தச்சேதி தானே சொல்லி
எழுதுமென்றார்

170. கோலக்கொண் டைவிசையா புரம்குறமிடி வலியாகிரி
முதலாய்
காலாகத் தோழன் என்றால் கந்தமால் முகில்குடியாதே
வாலாக் கழியூணி கோட்டை மதிள்தாண்டி வந்திருந்து
சென்று
சாலக்களவு கொண்டார் உன்மனிதர்
சதிபண்ணினாரெண்டெழுது மென்றார்

171. கால்மேலடி யெடுக்கும் பாதிக்காவல் தான் கொண்டு
அரசாளும்
வல்லக்கொண் டமனாயக்கர் மனிதர்தா மிங்கே நடமாடி
அல்லப்பூ சனமாபூண்டு கொண்டா யிதப்பட்டுடன்
களவுசெய் துன்னெல்லைக் குள்வந்த கள்ளன்
வெனென்று பாரென்றெழுது மென்றார்.

172. கொடுத்தார் நெதிநெதியம் பாவலர்க் கொடியமே
டைகளெல்லாம் சிகெறுத்து
தடுத்தான் வறுமை புல்லாம் எல்லாந்தான் தான்
தழைத்திட தயவுவைத்தான்
படுத்தார் னாயக்கந்தான் உன்மனிதன் பகலைக்கி
மேல்வந்தணிகிக் கொண்டு
எடுத்தான் அரிதான பெட்டிஎவ னென்றுபாரென்
றெழுதுமென்றார்

173. நிறையான வனாகிஅந்த நீதிகாவல் சேர்அரசாளும்
துறையூர் தனில் வாகும் ரெட்டிதுரை வெகுவலிமை
யேனறறியானோ
அறைகாவலுக் குள்ளே வைத்தஅரிதாய்தன
தோர்பொருளெடுத்து
துறையூர் வழியாக வந்தவன் உன்னிட
மனிதரென்றெழுது மென்றார்

174.(1) திருப்பார் கடல்போலே வாழும்மதி சாதமகாராசன்
போலே
யிருப்பார் தினக்கொலுவில் முருகர்யிணை யடிதாளை
தான்பணியும்
விருப்பஷ்சி தன்னில் னாயக்கர் வேவாள்
வைத்தொரு தூதாள்கை
சரிப்போ மோதான் சொல்லும் ரத்தினச்
சாப்பளிப்பொட்டியை யெடுத்ததென்றால்

(2) லெக்ஷ்மி வோசப்பய னாரயதோண்ட மானந்தனைக்
குறுதிபெற
உச்சிதமாகவேதான் வக்கணை ஒதஒதியை
பொன்னோலை
அச்சமிலா மலையே கோட்டை அருளைத்தாண்டி
வந்தெடுத்துக் கொண்டு
தச்சூர் வழியாக வந்தவன் தன்னுட மனிதாரென்றெழுது
மென்றார்.

175. ஞாயத்தைக் கேளும்சினே கிதமனாமுந் தாமுமாயிருந்
ததெல்லாங்
காயக்கங் காணும் பாளையக் காறரோட
தானுறவாமோ

மாயப்பொடி தூவி கோட்டை மதிளைத் தாண்டி
வந்தெடுத்து கொண்டு
ஆயக்கொண் டமனாயக்கர் அவருட மனிதரென்
றெழுதுமென்றார்.

176. மெய்யருளான் தெய்வம் பழணவேலவர் தாள்தனைத்
தினம்பூசை
செய்யுமுபகா ரன்வேலைச் சொன்னோபன்
தனக்கியல்பாக
பையிரவ தனில்வந்து கொட்டைப் பாளையக்கா
றரையேற்கைபண்ணி
அய்யமிலா மலையே எடுத்தவன் அவருடமனித
ரென்றெழுது மென்றார்

177.தன்னுட தேசமெல்லாம் அரசுதானாள பாளையகா
றருக்கு
உன்னித மாகவே தானகாகிதம் ஓலைதாளி
யள்தானெழுதி
யின்னொமே களவுவெடிய ஏழரை னாழிகையில்
வந்ததென்றால்
அன்னமு மயர்மருந்தி மதுரையாளுமீ சரைத்தொழுவ
ரென்றான்.

### 178. கலி

தொழுவ னாமென்று சொல்லிதுரை சொக்கலிங்க ராயன்
முழுதிலுந்த வுதமிட்டு முடுகியே நடந்த போது
பழுதிலாக் காவலாளும் பாளையக்காரர் கூடி
யெழுதொணா விசாரமிட்டு யிதற்குயேஞ் செய்வமென்றார்

### 179. தரு

செய்யும் வகையே தோன்றுமறி யேன்எங்கள்
சிவன்முரு கேசரிட சேவடியல்லா மல்
மைய்விழி யாள்ரத்தின மங்கைக்காக அய்யா
வாகுசிங்க னாயக்கர் வந்தெடுத்துக் கொண்டார்
கையிலும் சித்திர வித்தை பாற் கஅந்தக்
கன்னல்வாசல் தன்னருகே மன்னர் வந்து நின்றார்

180. செம்பென் மணிமார்பன் றகுனாதன் அந்தச்
சேனைக்குத் தவனான் ஞானமுத்து வீரன்
கும்பல்தனில் வந்துநின்று பாத்துயிது
கொட்டாத்தூர் முத்துதம்பி கொண்டனடி யென்றார்
தம்பமென் நின்றோர்க் கபிமானங் காத்தான்
தன்மதிரை யரியலூராற்குச் சொல்லி வான்
தும்பையூர் கறுப்பன் மகன்பாலன் அவன்
தூக்கி வைத்த காலடி என்றறியு மென்றார்

181. அறியாதோர் செய்தபிழை தன்னை
அத்தனையுந் தான் பொருக்கும் உத்தம குணத்தான்
நெறியான காலாக்கள் தோழன் அவன்
னத்தமெச்சம் பத்திரகுடி நேசமுடன் வந்து
குறியாகச் சொல்லுகிறான் பாரும் எங்கள்
கோதண்ட விசைய றகுனாதன் யென்றார்
பிரியாமல் வேலர்தனைப் போற்றும் அந்தப்
புண்ணியவான் வல்லக்கொண்டன் போதவே தடுத்தான்.

182. போதவே பாதிக் காவலாளும் எங்கள்
புங்கணூர் வெங்கண்ண பூஞ்சேலை குமாரன்
ஆதரவாய்ப் பெத்தெடுக்க பிள்ளை அவன்
ணனுமின்னும் துள்ளுதாயாள கள்ளனொடு மையல்
வேதன்மால் றியோணா விவேகம் அய்யா
வென்றலை அணிதம்ராயன் கண்டுமிருப்பார்காணி
சூதைஆரு மறியவொண்ணாது நல்ல
சொல்லுக்கு விக்கிரம சூரனடி யென்றான்

183. சூராதி சூரனை சூரன் னல்ல
சொல்லுக்குயர் விக்கிறமன் வில்லுக்கு விஜயன்
பாராளும் மன்னன் துறையூரான் அவனைப்
பாத்துனா னுரைப்பே னென்று பஷ்ஷமாக வந்தான்

தாரூர் பெத்தமகன் முத்தன் அவன்
தம்பி மகனைக் கொண்ட வம்பனொரு பையல்
சீராமன் காலடியி தென்றான் யிதல்லால்
சித்தடி பிறம்பா யொண்ணு வைத்திருக்க தென்றார்

184.சித்தசராய்த் தொண்ட மானும் அவன்
சித்தடிக் குறிப்பறியச் சித்தமே மகிழ்ந்து
மத்தாடு மல்லலிது கேளும் அல்ல
வாகனக முத்துவருதப் பன்மகன் றங்கன்
பெத்தெடுத்த பையல் முத்தணிச்சன் அவன்
பெரிய சூதுகாரன் காசினியி லில்லை
எத்திக் கொண்டுபோய் வல்லி அந்த
எல்லிமகள் கையில் வந்திருக் குதென்று சொன்னார்

185.சொன்னபோது வல்லக்கொண்ட னாட்டில் அங்கே
சுங்கம் வாங்கும் ஆயக்காரன் தொங்கனவன் வந்து
முன்னாளிற் பத்துபத்து மாதம் மூன்று
மூட்டைக்காரன்ஆளொரு பையனுடன் சென்று
பொன்னினா லிழைத்த ரத்தினப் பொட்டியிந்தப்
பூவுலகில் கண்டதில்லை யானுமிந்த னாளாய்
நண்ணாக னானதை மறித்து அய்யா
ஞாயமது கேழ்க்கவே தானோதி னென்றான்

186. ஓதரியரென் பழணிக் கந்தர் அவர்
ஒப்புடனே பூசைசெய்ய மெய்ப்புட னழைத்துப்
போதமலர் சந்தணஞ் சவ்வாது நல்ல
பொற்சரிகைப் பட்டுவகை யிட்டிருக்கவே தான்
சேதுபதி மன்னன் றகுநாதன் அவர்
சிந்தை மகிழ்ந்தே மிகவுமதந் ததிந்தப் பொட்டி
சூதுபண்ணித் தன்னிலே மயக்கி நல்ல
சொட்டுப் போட்டு என்னையவன் தெட்டினான்
காணென்றார்

187.தெட்டினா னென்றே யுரைத்தாய் தம்பி
திட்டமெம் மாத்திர முன்டுசட்டமோ அந்தாளும்
நட்டுக்குரு வின்தம்பி சுத்தம
நமசிவாயனு யாமுண்டு கறுவல்லல் நீளம்
யிட்டபணி வேலைசெய்யும் பையல் அவன்
எல்லப்பன் குமாரனத்த நல்லப்பனைப்போல்
கட்டுவறகங் கள்பொன்னரி மாலை அய்யா
கண்ணினால்ப் பாற்கவும் ஒண்ணாதவனையென்றார்

188. எண்ணியே எழுத்துப்பல சாத்திரம் அய்யா
ஏற்கவே உரைக்குமந்த பாப்பாரை அழைத்து
நன்றுபெற னாமொன்று நினைத்தோம் அது
நல்லசகுனமாகவே சொல்லவேணு மென்றார்

குண்ணுருக வேலெறிந்த அய்யா எங்கள்
குமரர்வாழும் பழணிதன்னை கூடியிந்த வேதம்
புண்ணிய வையாபுரிக்கு தெற்காய் நல்ல
பூவையொரு தாசிவீட்டில் வைத்திருக்குதென்றார்

189. கலி

தாசிமே லாசை கொண்டு தங்கையிற பொருளை யெல்லாம்
காசிலாமிலையே யீந்து களவுறவாகத் தணம்
மாசிலா மேனி தங்கள் வள்ளினாயகி தன்பங்கர்
நேசமும் வைப்பாரானால் நீடூழி வாழாமே

190. தரு

உள்ளம் பில்லாதால் ரத்தினிக்கு தவியல்செய்து கூடுகின்ற
கள்ளன் தனைபிடிக்க மதிரைக் காவல்காறர் திரளக் கூடி
வெள்ளம் போலபரந்து வெடச்செந்தூர் வழியே வந்துநின்று
தெள்ளுப் புகழ்ப்பழணி அய்யா திருவாவினங் குடிசேந்தனரே

191.சேந்தேன் மகிழ்ந்து வேலைச் சொன்னோபன் தனக்கெதிர் னோக்கி
வேந்தன் மனைபுகுந்து நல்லவிலை யிடாடப் போகா திட்டவெல்லாம்
தாந்தான் களவுகொண்டு கள்ளன் தனியிருள் தனிலே வந்தவனை
ஆய்ந்தே பிடித்துக்கட்டி நம்முடி அரமனை சமுகத்திலனுப் புமென்றார்

192. அனுதின மறவாமல்ப் பழணியாளும் மையவனை
அடிவணங்கி
தினந்தினம் பூசைசெய்யும் வேலைக் சொன்னோபெந்தி
என்தன் பிறகே
மனுதிரள் ராணுவரை நம்முட வாசல் கொல்லச் சேவுகரே
வினவியே வரவழைத்து பழனிவேலர் தாமறியக்
கூடுமென்றார்

193. கூவாக்குஞ்சு மயில்வளரும் குறவர்
தெருவையே மணம்புணரும் தெய்வசிகாமாணி
தேவாகா ணாதிருக்குந் திருமுருகர்
பூவாவன மேவிமேயும் புலியைத் துரத்தி
செயம்பெறும்
வீராவா வாகண் குளிர நம்முட
மதிரயிலிருந் துவந்ததி செயங்கேள்

194. மதுரைத்துரை வீட்டில் ரத்தின மாணிக்கப்பொட்டியை
எடுத்துக் கொண்டு
கதிரோன் மறைந்த பின்பு நம்முட காவல்க்குள்
ளடிச்சென்று தென்று
அதிரவேங் கடலொலி போல் நல்ல ஆனையுஞ்
சேனையும் ராணுவமாய்
சதிரங்கத் துடனே வந்தராச்சியன் செய்தவரே
வாரோவென்றார்.

195. சதிபாதகத் துக்கஞ்சான் அந்தச் சனி பகவானை
மிகனோக்கி
விதியுள்ளக் காரணத்தே நம்முடவீரியத் தாலேலெல்ல
லாமோ
மதியணி அரனார்மால் னான்முகனும் வருகிறகாரி
யம்அறிந்தாரோ
பதியழியும் மாசசேதேவ பஷ்ஷத்துக் கேற்கவே
பாருமென்றார்

196. பாரினிலுதித் தாளவும் நம்முட பந்தமே கெதியென்று
பூசை செய்தான்
வாரணிமுலை மாதுரத்தினி மாயமயலால் களவு செய்தான்
ஆரென்றிதுச் சொல்வோம் பின்னையும் அடைக்கலம்
வாரதையை விடப்போமோ
நேரணிசீர் வசமாய் சனியாதிற் துனுக்கேற்கவே நடந்து
மென்றார்

197. நடந்திடுமென் உரைத்த வார்த்தைக்கு னான் சொல்ல
அடியேன்
பயப்படுவேன் ஷஷத்தோட ரவமணி ஆதிவிமலர்
திருவிளக்கியல் புரிந்தாய்
சடத்தோடு யிரிருக்கயி லனைச் சேரவே கைகால்தனை
வாங்கி
கடைத்தெரு வழியில் நின்றுயிவனைக் காசுகள் வாங்கவே
விடுகவென்றார்

198. அப்படி அவன் தலையில் எழுதின அயனமாலரனு
மறந்திருக்க
எப்படியா னுரைப்பேன் அடியேன் என்னாலா வதுமேது
முண்டு
சொலப்படி செய்துவைப் பேன்னானும் சூதுகள் வாதுகள்
சொல்லச் சொல்வேன்
மெய்ப்பொருள் வெளி வெளியே ஆதிவேதக் கயறே
வேலோனே

199. அய்யன் அரண்மாலும் நல்ல அமரரு முனிவரும்
அருகிருக்க
மெய்யா மாற்கண்டன் தனக்குவிதி பதினானும்
எழுதிவைத்துப்
பொய்யே மிக வளைத்து யிந்தப்பூ யிலே எமனை விழ
உதைத்து
செய்யுஞ் சிரஞ்சீவி தானளித்து சிறுபதந்த தனிலே
சேற்கிலையோ

200.அண்ணலொரு வன்தானல்லோ அன்புள அரு மைக்காக
வென்றே
விண்ணோரி விழும்தயவால் மேலோகங் களுந்தானறிந்து
மண்ணும் விண்ணும் திண்ணதிர யிந்தமரனத்
திலுள்ளோர் சாகாமல்
ஒண்ணேங் குங்கினது ஆதிஊழிப் பயனது ஒளித்துவே

201. பத்தர்க் காரியத்தெ தேவர்பார்க் காரியம் நடத்துவரோ
கற்றாக்கள் அறியஆதி கரியமாயவன் தானறிய
எத்தாகத் தானே தேவற்கேற் கையாகவே பாற்குறன்யான்
சுத்தரங்கப் பொருளே வேதச்சுடரே யொளியே
சாமியென்றார்

202. அந்தப்படி தானே செய்யுமாகுற காரியம் ஆகுதலால்
முந்த ஒரு சொல்லால் அந்தமூதண் டங்களுந்
தானிருண்டு
கொந்தார் குழலுமையாள் கோசலை மேல் மலைமேல்
வருந்து
வந்தார் வந்தார் வெளிமானார்அய்யா மாயக்
கிழவனாகினரே

கலி

203. உருவிலாச சேதிதந்த ஒப்பிலாக் களவு நண்ணாய்ப்
பரிவுடன் சனிக்குச் சொல்லிப் பழணி மாமலைமேல்
வந்தார்
கருவுடன் காவல்க்காரர் கள்ளனைப் பிடிக்க வென்று
தெருவெலா மலைந்து கொண்டு தேடியே வருகும்
நாளில்

204. தரு

தேடியே வருகிறனாளில் ஒருதேசத்தி லிருந்துவந்த திரவியத்
தனப்போல
நாடியே பூண்ணூலும் பய்யும் அய்யானாட் டுக்குபெரிய
செட்டினானெனவே சொல்லி
தாடிக்கீழ் தொந்திவயிர் மேலே நல்லதாவடம் ருத்திராஷ்ச
மாலைகள் புனைந்து
கூடியே அஞ்சாறு பேராய் அடகொப்புடன் சனிபகவான்
தோப்பினிலிருந்தார்

205வையாபுரிக்கரை யில் நின்று மாயமான் சனிபகவான்
உபாயமாய் நினைத்து
தையாள்மன மிளகிரத்தின நல்லகாதி னாகமணிக்
கல்லைதன் கடையில்விக்க
கையராக் கண்டிருந்த தட்டான்அந்தக் குமாரனெங் கள்
கஞ்சமலை யென்றோர்ன
மெய்யாக அந்திவேளை தன்னில் அவன் வீதியில்
சென்றேயந்த சாலை வழிவந்தான்

206. சாலைவழி வந்ததட்டான் தன்னை நல்ல
சந்தோஷமா யெழுந்து கனியைகவ ரனை
சேலையைப் பிடித்திழுத்து னானும் அண்டே
சேரவேயிருத் திவெகுபாதாக மானத்தி

மாலைக்கே யிசைந்த ரத்தினமுத்து அந்த
மண்டலத்தை யாளுந்துரை கொண்டுவரச் சொன்னான்
வேலை சூழ்ந் தவையக மெல்லாம் அய்யா
வேண்டுவன வடம்பாத்தோ மகாணங்கான மென்றான்

207. தச்சன் வீட்டுக்கு கிழக்கு மூலை நல்ல
தாளிப்பனை வைத்திருக்கும் மாளிகை யும்வீடும்
பச்சையப் பன்மகன் பெத்துசெட்டி யிந்தப்
பட்டணத்து கதிபதிதோட் டவறதகன் காண
கச்சுமுலை மாதுரத்தின வல்லி அந்தக்
கல்லிலொன் றெடுத்துபோய்க் கடைதனிலே
வித்தாள்
உச்சிதமது சொல்லப் போகாத நேத்தியிந்த
உலகமெல்லாம் விலையல்ல உம்மானை யென்றார்

208. உளவுகண்டு சொன்னதட் டான்தன்னை அவன்
உச்சியை முகந்துகொண் டுஉளவிலா லனைத்து
களவுசெய்த வாருசிங்கன் வீட்டை நன்றாய்க்
கலகமிட வந்திருந்த காலச்சனி யோனும்
அளவிலா வாழ்பெறுமு தாரன் அவன்
அரமனையை னாடியிலர் அஞ்சுபேருங் கூடி
வளவினில்ப் போய்ப் புகுந்தார் பெத்து செட்டி
வாருமென்று தானழைத்தோர் வந்தோமென்று
சொன்னார்

209.சுவடியில் இல்லை

210.கள்ளமறியா மல்ப்பெத்து செட்டி அவன்
கடுக எழுந்து அந்த அழகு பெறுங் கல்லை
உள்ளவிலை னீங்கள் சொல்லுமென் றார்அவர்
ஒன்பதுனா யிரம்பொன் காணதறம் மிதுவென்றார்
கொள்ளை கொள்ளவந் தார்கள் அய்யானான்
கொண்ட விலைதா னிருக்காதே ண்ட மிறுப் பேனோ
வள்ளலருள் குமரேசர் பாதம்யிது
வாங்கின விலையறியும் நீங்கள்போ மென்றார்

211. நல்லதிங்கே வாருமென்னைப் பாரும் னான் சொன்னால்
அல்லோ உமக்கு வந்தது காண கோபம்
கல்லையு மெடுத்துக்கொண் டுபோவம் அந்திக்
கடையிலிருந்து பெறகுக்கூடி னாமுசைப் போம்
வல்லவர் களுண்டே அங்கேயிரத்து அவர்கள்
வைத்தவிலை னாமிருவர்ஒத்துமிகக் கொள்வோம்
யில்லையெண் ணால்பொற் மிங்கிராதே
யிதுயென்ன சனியன்கெடு வாய்கள்ள
மிதுவென்றான்

212.போகவோ னாங்களிங்கே வந்தோம் அய்யா
பெறும்விலை சொல்லுங்கையில் தருகிறோம்
பொன்னென்றார்
காகமேறுந் துரையிருள் சுத்தநல்ல
கரியமேனி பருதிமகன் காரி உபகாரி
ஆகமுடன் வருக்குரைக்க அய்யா
அந்தமூடன் பெத்து செட்டி தந்திர மொழிவான்
நாகமீண்ட கல்லல்ல என்னை சும்மாய்
நம்மைய லட்டாதே யுங்கள் தறம் மிதுவென்றார்

213.பன்னிப் பன்னி விசேஷங்கொள்ள ரருகப்பார்
பஷ்ஷக்காரி யங்கள் பண்ணிணலச்சையள்
செய்யாதே
யிண்ணமொரு தறமத்தைப் பாற்போம் ஏழாம்
ஏற்கையென் றால்ப்பாற்குறோம் யில்லையென்றால்
சொல்வோம்
பொன்னும் நவமணியான் முத்தை னான்
போதவே யெடுத்து வந்துசோதியுங் கெளென்றார்
என்னயிது தனேன் மறைத்து வீசிவிட்டு
எறித்து அங்கனே பொட்டென மறைத்தார்

214.காச்சுமூச் சுவென்றுகூட வல்சத்தம் யிந்தக்
காவல்க்கா றச் சேவுகற்கு காதிலே கேட்டு
பேச்சுமூச் சறியாத் துலுக்கர் கூடப்
பேய்வருக் கன்னடியா பின்னே சில ராணுவ
ஆஷ்சியா கவேவிசேஷம் பண்ணிய வரை
அரமணையில்த் தள்ளி போய் ஆசாரத்தில் விட்டு
நீச்சு நிலை காணமிவர் சேதி அய்யா
நீதியுடனே பாதைச் சோதியுங் கெளென்றார்

## விருத்தம்

215 பார்புகழ் வேலைச் சொன்னோபன் பரிவுடனி வரைப்பத்து
வாருமென பெத்துச் செட்டிவரி சையோடெனை
யழைத்துய்ய
வாரென் றுழைக்க அச்சி தேசத்துக் கள்ளர்
சீருடன் களவுகொள்ள சீமைமேல் வந்தா னென்றான்

216.எப்படி தெரியச் சொல் லுமென்று வேலைச்
சொன்னோபன்
தப்புரை யாதேசெட் டிதறம்மே செய்மென்
றெண்ணிமை
யப்புயன் வாகுசிங்கன் மலைத்திருந் தானேவல்லி
விற்ப்புரு வநல்லாள் வித்ததோர் கல்லென்
றெண்ணான்

217.நல்லது வாருமென்று ரத்தினி யிந்தக் கல்லை
சொல்லுதீர் விலைதா னென்று சுமுத்திரையாகக்
கேட்டான்
ஒல்லியர் யிந்தக்கூன் னஒன்பது னாயிரம்பொன்
னென்றான்
யில்லை யென்றெடுத் துக்கொண்டு என்மனை
புகுந்தானென்றான்

218.வருந்தியே அஞ்சுபேரும் மயங்கியே தெருவில் நின்று
பொருந்தி விலைக்குத் தானேபோ தவேவாங்
குறோம்நாம்
தெரிந்த டாயின்னஞ் சத்தேதெளிந் திடப்பாற்போ
மென்றான்
யெரிந்திடும் ஒளிசேர்த்தி யாம்யெதுக்கு மாக தென்றான்

219. திங்கள்வெண் குடையோன் வேந்தன்தெ ரியவேலைச்
சொன்னோபன்
அங்கதை எடுங்கொள் பாற்போம் என்று தான்
அரசன்கேழ்க்க
அங்கவா கையிலேதான் அடக்கா யிருக்கு தய்யா
கங்கொளி மேனியானே காரிய மாகப்பாரும்

220.பாரிய வேலைச் சொன்னோன் பஞ்சவர்முகத் தைனோக்கி
காரிய மாகவேதான் கலகனைக் கொடுவா யென்றான்
சூரியன் அளித்த மைந்தன் சூதோடுமா யக்கல்லை
வாரியே கய்யில்எடுத்து மன்னவன் முன்னே வைத்தான்

221. தரு

மன்னவர் முன்வைத்தாள் ரத்தின மாணிக்கல்கள்
மினுமினுத்தல்
அன்னகர் தன்னிலுள்ளோர் நிறைந்த அழகுநிலவு போல்
குளிர்செறிய
யென்னமோ தெரியாது நம்முட யிருபத்தொரு தலைமுறை
யறியோம்
கன்னல்சேர் மொழிவள்ளி கணவன் கந்தர் முருகரிடவிந்
தையென்றார்

222. விந்தை யிதாமெனவே துரைகள் மெச்சியே வாவா
பஷ்ஷமதாய்
சந்தைக் கூட்டம்போ லராணுவர் சகலயின போதான் கூடி
அந்தநம் மதுரையிலே தான்நம்முட ஆண்டவன் மாளிகை
அரண்மனையில்
தந்திரமா கவேதான் கள்ளன்தான் கொண்டுபோ னகல்லி
தென்றான்

223.வண்டாடும் புகழ்சேர் நம்முடவளர் பழணாபுரி
தேசமெல்லாம்
கொண்டாடும் வேலைச் சின்னோபன் குணமுடன்
செட்டியை வரவழைத்து
உண்டான படியே சொல்லுமுன்பாக அவள்மிகத் தந்த
தெல்லாம்
கொண்டாடும் முலையாள் ரற்றினி சிலவுகள் வாங்கின
கல்லிதென்றான்

224.காவல்காரர் களேகாலார் ராணுவரான சேனைகளே
போகவிடா திவனை செட்டியை பொய்யும் மெய்யும்
கௌவுளவு
வாகுசிங்க னையும் நல்ல மாமயல் தந்த ரற்றினியும்
ஆகமுடன் பிடித்து நம்மு அரமனை வாசலில்லிடுங்
களென்றார்

225.மட்டார் புயணையான் அந்தவாகு சிங்கனைக்
கலகமிடப்பட்டான்
கூட்டம் அவனைப் பரவியே சூழ்ந்து வளைத்துக் கொண்டு
கட்டாரக் கட்டிஅந்தக் காரிழை ரத்தின மங்கையையும்
விட்டார் கொண்டு வந்து அந்த வேலைக் சின்னோபன்
சபைதனிலே

226. அபிமான மற்றென நல்லஆசார் மதியாரி தானுமத்தேன்
செவியார்த் தானேயிந்தச் சேனையள் நல்வசை பெத்தேன்
தாவிகால்ப் பட்டேன் எந்தன் தலைமுறை யில்லாத
தாழ்வானேன்
புவிராசர் முன்னேஉறங் கினபூனையைப் போலேயான்
நின்றேன்

227. மாயச்சனி பகவானந்த வாகுசிங்கனை வளைத்துக்
கொண்டு
உபாயத் தனமாக நன்றாய் உளாம்பலங் களாக்கி வைத்து
காயக்கமா கிமிந்தக் காவலர்க்களுக் கொராளாகி
ஞாயத்தை மொழிவான் யிவன்நல்ல சேவுகன் என
மொழிந்தான்

228.சீறியகுண வேந்தன் வேலைச் சொன்னோபன்
தண்ணெதிர் னோக்கி
வீரியங் கனல்வேர் செருவைவெகு மானபூஷன் மிக
வளித்தேன்
காரியம் பார்க்க வல்லோன் எந்தன் காறுபாறுகள்ள
உனக்களித்தேன்
தாராநெறி வில்லான் வல்லி தன்னால் கள்ளனாயே

229. அழகிய மதுரையிலே நம்முட ஆண்டவன் மாளிகை
அரமனையில்
பழகிய மனிதரைப் போல் நல்ல பரிவுள ரத்தினந்
தானெடுத்து
மழைநிகர் குழலாள் முன்வைத்த மாணிக்க கல்லில்
குறையாதே
தழல்விழி அழல்புரிசேய் முருகர் தானறிக் கொண்டு
வாருமென்றார்

230. கட்டுகள் தானவிழ்த்து நல்ல கையிலே சங்கிலியாடிக்
கொண்டு
விட்டபோ தெழுந்திருந்து நல்ல மேலாள் காலாள்
தன்னுடனே
யிட்டுபோயி மனைபுகுந்து நல்ல யிணையிடப் போகாது
டமைவைத்த
பொட்டி தனையெடுத்து துரைகள் பெருகிடுசபை முன்
வேத்தேனே

231. வைத்தபோ தெனைமெச் சிதுரையள் பளர்சபாசெனக்
கொண்டாடி
தத்திடும் பரிபேத்தி நல்லதாபித பிதாம்பர பட்டுடுத்தி
நெத்தியின் நாமமிட்டு நன்னாய் நெருங்கச் சேனையார்
சூழ்ந்துவர
சுத்தியே பட்டணத்தை பழணிசுப்பிர மணியரைத்
தெண்டநிட்டேன்

232. கும்பிட்டெழுந்த திருந்தேன் பழடிணிமர ரைவாந்தா
வேண்டிக் கொண்டே
அம்பிட்ட நேராய் எந்தனை அருகினில் தாங்கலில்க்
கெவுளிசொல்ல
நம்பிக்கொண் டிருந்தேன் எந்தன் னாயகிதன் னையுங்காரு
மென்றென
கும்பிட்டே நடந்தேன் பழணிக்குமர ரையானுந் தொழுதேனே

233. சேனையள் சூழ்ந்துவர நல்ல சேருவை காரர்
முன்னோட
யானையின் மேலிருத்தி எந்தன் அருகினில் வெண்சாமரை
வீச
தேனேநல் மொழியாள் ரத்தினி தெருவையை குதிரைமேல்
தானேத்தி மானேவிழி மடவார் நல்லமங்கையர் கேளிக்கை
யாடினரே

234.மந்தார் மலைமார்பர் அய்யா மன்னன் சென்னம
னாயக்கரே
எந்தாயே துரையே அடியேன் என்னால் மோசம் போனேனே
பந்தாடு முலையாள் ரத்தினப் பாதகியா லிந்த விதமானேன்
நின்தாளே துணையே சாமிநெடு நாளிருந்த சாளுலையே

235. வந்தோம் பயணமதாய் மதிரைமாதில் கோபுரங்
கண்டவுடன்
எந்தன் குலைநடுங்க யிவன்தான் யென்னசெய் வானோனெ
நினைந்தேன்
முந்தவுங் கோவனே பாண்டியன் முடிசெய்து விட்டதல
மல்லவோ
கந்தரென் பங்கிருக்க கல்லைக் களவுகள் வாராதே
தாருமென்றான்

236. பாளை காறரெல்லாம் நன்றாய் பரிவுடன் கூடியே
பேசிக்கொண்டு
ஆளைச் சொல்லவிட்டார் கள்ளன் அகப்பட்ட சேதிதுரை
யாறிய
பூளைகள் மேலணிந்த யீசனே பொத்திய லிங்கம் பூசை
செய்யும்
வேளையி லோடிவந்து வரவீந்தார் காலில் பணிந்தாரே

237. பணிந்திடுந் தூதுவரை தான் பாத்தே விசேஷம்
பகருமென்றார்
பணிந்துவந் தார்மனையில் நல்லதுரையள் பாத்து அரை
தனக்குள்
கணிந்திடக் களவுகொள்ள கள்ளனைதான் மிகனாங்களும்
பிடித்து வந்தோம்
யணிந்திடு போனிர்பல யிவனை அழைத்து வருவதோ
உரைத்திடரென்றார்

238. முப்புரமெரி செய்தவர் சொக்கர் முக்கண்ணனார்
விழித்திருக்க
அப்போது நினைந்தும் நம்முட வனையுஞ் சேனையுஞ்
சூழ்ந்திருக்க
கற்பியகள வுசெய்தோன் கொஞ்சக் கள்ளருக் கெல்லாந்
துரைராசனே
எப்படிக் காத்தவர் அவனை எற்கு மினையிடப் போகாதே

239. அய்யா நாங்கள் கண்டோம் அவன்காண ஆண்பிள்ளை
சிங்கச் சேவுகள் காண
மெய்யாச் சொல்லுகிறோம் அந்தவேலைச் சொன்னேபன்
காவலுள்ளே
மைவிழியாள் வீட்டேரத்தின மாணிக்கம் பொட்டியை
எடுத்துக் கொண்டு
ஒய்யார ஒயிலும் யிந்த உலகிற் எவருமில்லை யென்றார்

240. பத்திரமாக வேதான் சொல்லும் பாளைய காறருடனே
தான்
கத்தியள சமுதாடு அவன் கையருகே கொண்டு போகாதே
நித்திரை வந்துதென்று நீங்கள் நினைவுகள் தப்பித்
தூங்காதே
எத்தியே போய்விடுவான் யிதற்குளது சொன்னாலுங்
கேளென்றார்

241.தூதுவரோடி வந்துநண்ணா பத்துரைசொன்
னவார்த்தையை மொழிந்திடுயார்
மாதுதன் மயலாலே களவுவகை யுடன்கொண் டவன்வாகு
சிங்கன்
சூதுகள் பண்ணப்போ னான் நல்லசொக்குப் பொடி
வித்தைப்பல செய்யப் போறன்
ஏதிவன் மளப்பமென்று அசைந்து யிருந்துவிடா தையளென
வுரைத்தான்

242.கஞ்சுக்கொம் பூதநல்ல காளமேக் காளம்மூத
வஞ்சியர் நடனமிட நல்ல மத்தளம் பேரிகைதான் முழங்க
யுஞ்சலில் ராணுவப்பேர் நண்ணாய் அணியிட்டே
பார்மிட்டடிவே
மிஞ்சிய மேடைதனில் துரையும் வீத்திருந்தாலென்னை
பார்த்திருந்தார்

243. பார்த்துக்கொண் டேயிருந்த மதிரைப் பாளையகாரர்
திரள கூடி
காத்திருந்தே பிடித்துஎன்னைக் கையிலே சங்கிலி
ஆடிக்கொண்டு
மாத்திரை யில்லாத ரத்தின மாணிக்கப் பொட்டியை வைத்து
கூத்திடும் மென்போலே என்னைக்கொண் டுவந்தேயெதிர்
கண்டாரே

244. கண்டென்னை னோக்கிதுரைகள் களித்தார் குறுநகை
நகைத்தாரே
அண்டையிலே நீங்களில்லாமல் அக லப்போமெனத்
தள்ளிவிட்டு
வண்டனிகுழ லாளே வசிகரத்தின மங்கையைக் கூடிக்
கொண்டு
தெண்டன தெண்டனென்று நன்றாய்த் தெரிசினைனான்
பண்ணிக் கொண்டேனே

245.தீரன்னா மெனலாம் நல்லதிருடற் கெல்லாந்
துரையெனலாம்
சூரன்னா மெனலாம் மெத்தசூது களைப்பெத்த சூதனெனலாம்
வீரன்னா மெனலாம் சூஸ்திரவிக்கிறமாற்க னிவளெனலாம்
யார்தானிவ னெனலாம் யிவனுக்கிவன் பெரிதே என
நியம்பிடலாம்

246. காவல்காரர்களே நல்லகன துரையான் மந்திரியே
பாரியபெரி யோரே நீங்கள் பரமாயம் பண்ணிக் கொண்டு
வீரியமாவைனே அவனை வெட்டலாமோ விடலாமோ
நேருடனார் யாந்து உங்கள் நினைவினில் வந்ததுரையு
மென்றார்

247. மதியார் மமத்து நல்ல மாமதிள் கோபுரந்தான் கடந்து
சதிபாதக மாகநல்ல சாம்பளிப் பொட்டியைக் களவு வைத்து
எதிரில்லை யென்று நன்றாய் எடுத்துக்கொண்
டோடிப்போனவனை
விதியுள்ள காரணத்தால் அவனைவெட்ட வேணுமென்
றுரைத்தார்

248. வாட்டமில்லா முகத்தான் மதிரைச் சொக்கலிங்க
னாயக்கர் சொல்வார்
னாட்டினில் பழிவிளைபயன் யிவனோனா ளையுமிப்படி களவு
செய்வான்
கோட்டைக்குத் தென்புறமாய் அந்தக் கோவலனைக்
கொண்ண வடபுறமாய்
காட்டுக்கு மேல்புறமாய் நண்ணாய்க் கையையுங் காலையும்
வாங்குமென்றார்

249.கந்தப்பொடி யணிந்து நல்ல கள்பகஸ்தூரிப்
பொட்டுமிட்டு
சந்தன மேல்ப்பூசி மெல்லியச் சேலையைத் தானுடுத்தி
கொந்தலர் குழலாளே ரத்தினியை பத்திரைமேல் அவளையும்
கூட வைத்து
வந்தார் தெருவிதியிருப் புறமும் மன்மதன் ரதியும் போலேகி

250. பூரிகை தம்மட்டந் தா......*.. பொங்கிய காளஞ்சின்
னமுடன்

பேரிகை நரோகவும் நல்ல.......*.. யடமாயன்
தான்முழங்க

ஆரிய குலவேந்தன் நல்ல அழகுளவா குசிங்கனையும்

பாரிய படுகளத்தில் வந்து பழனி முருகரை நினைந்து
வந்தேனே.

251. அனுக்காபுரம்.....*

* சுவடிகள் செல்லறித்து விட்டன.

## செய்யுள் முதற்குறிப்பு அகராதி


| | |
|---|---|
| அங்கிருந்து | 54,104 |
| அடிதையாள் | 148 |
| அண்ணலொரு | 200 |
| அத்தனாரருள் | 34 |
| அந்தி | 142 |
| அந்திக்கடை | 30.89 |
| அந்தப்படி | 202 |
| அப்படி | 84,93,198 |
| அப்படியுரைத்த | 160 |
| அபிமான | 226 |
| அய்யன் | 199 |
| அய்யா | 239 |
| அரண்மகன் | 62 |
| அருக்காதே | 132 |
| அழகிய | 66,229 |
| அழியாப்பதவி | 65 |

| | |
|---|---|
| அழுந்திய | 114 |
| அறியாதோர் | 181 |
| அன்புடன் | 50,138 |
| அன்னக்கொப்பு | 143 |
| அன்னநடை | 158 |
| அனுதின | 192 |
| ஆண்டவன் | 52 |
| ஆர்சொன்னார் | 82 |
| ஆழக்குளம் | 68 |
| இசைந்திடும் | 81 |
| இருந்தேன் | 96 |
| உத்தமயல் | 157 |
| உதவிய | 118 |
| உருவிலாச | 203 |
| உரைத்திடு | 165 |
| உள்ளம் | 190 |
| உள்ளனாள் | 156 |

| | |
|---|---|
| உளவுகண்டு | 208 |
| ஊர்க்காக்கும் | 45 |
| எண்ணியே | 118 |
| எண்ணிருகோடி | 113 |
| எந்தனாடு | 209 |
| எப்படி | 216 |
| ஏகுமென்று | 134 |
| ஏறியே | 108 |
| ஒருபிறந்த | 146 |
| ஒன்றாக | 161 |
| ஓடியே | 136 |
| ஓடினானோ | 102 |
| ஓதரிய | 186 |
| ஓதின | 149 |
| கஞ்சு | 242 |
| கட்டுகள் | 230 |
| கண்டபோதே | 131 |

| | |
|---|---|
| கண்டுனான் | 100 |
| கண்டெடன்னை | 244 |
| கண்டேன் | 92,112 |
| கந்தப்பொடி | 249 |
| கந்தன் | 116 |
| கருத்தினில் | 167 |
| கலங்கு | 103 |
| கலந்து | 153 |
| கள்ள | 210 |
| கற்பூரச் | 29 |
| காச்சுமூச்சு | 214 |
| காதலி | 123 |
| காதலே | 63 |
| கால்மேலடி | 171 |
| காவல்காரர் | 224,246 |
| குதித்திடும் | 120 |
| கும்பிட்டு | 232 |
| கூக்கொண்டு | 90 |

| | |
|---|---|
| கூவாக்குஞ்சு | 193 |
| கேட்டான் | 144 |
| கையிலுள்ள | 31 |
| கொஞ்சிய | 37 |
| கொடுத்தார் | 172 |
| கோபமே | 166 |
| கோலக்கொண்டை | 170 |
| சக்கரை | 35 |
| சக்திகாரணி | 43 |
| சத்திர | 49 |
| சதிபாதக | 195 |
| சம்பாதி | 72 |
| சாலைவழி | 206 |
| சித்தசராய் | 184 |
| சித்தாண்டி | 141 |
| சீகாழி | 78 |
| சீறியகுண | 228 |
| சூதானமான | 28 |

| | |
|---|---|
| சூராதி | 183 |
| செம்பொன் | 180 |
| செய்யும் | 179 |
| சேதியே | 137 |
| சேந்தேன் | 191 |
| சேரவே | 105 |
| சேனையாள் | 233 |
| சொக்கர் | 101 |
| சொக்கநாதர் | 85 |
| சொல்லென்று | 152 |
| சொன்னபோது | 185 |
| ஞாயத்தை | 175 |
| தச்சன் | 207 |
| தஞ்சமென்று | 48 |
| தடுத்தார் | 119 |
| தடுத்தாள | 117 |
| தண்டுப்பாதை | 129 |
| தய்யல்மேல் | 125 |

| | |
|---|---|
| தருமநீதி | 73 |
| தன்னுட | 177 |
| தாசிமேல் | 189 |
| திங்கள்வெண் | 219 |
| திடமுடனே | 61 |
| திருப்பார் | 174 |
| தீத்தமலை | 55 |
| தீரன்னா | 245 |
| துதிக்கும் | 185 |
| தூதுவரோடி | 241 |
| தெட்டினா | 187 |
| தெண்டன | 151 |
| தென்னாவலர் | 106 |
| தேடியே | 204 |
| தேரணி | 145 |
| தேனுழை | 110 |
| தொழுதுனான் | 88 |

| | |
|---|---|
| தொழுவனா | 178 |
| தோட்ட | 122 |
| நச்சரவும் | 83 |
| நடந்திடும் | 94,126,168,197 |
| நடந்தேன் | 121 |
| நம்பினேன் | 77 |
| நல்லது | 211,217 |
| நிண்ணெ | 97 |
| நிறையான் | 173 |
| நினைக்க | 59 |
| நினைத்த | 130 |
| நினைத்திடும் | 124 |
| பக்கமாக | 164 |
| பணிந்திடும் | 237 |
| பணிவிடை | 79 |
| பத்தர் | 201 |
| பத்திரமாக | 240 |

| | |
|---|---|
| பல்லைத்திற | 127 |
| பாக்கியம் | 154 |
| பாத்து | 243 |
| பார்புகழ் | 215 |
| பாரிய | 220 |
| பாரினில் | 196 |
| பாரென்று | 133 |
| பாளைய | 236 |
| பிடித்தவள் | 32 |
| பிறம்பே | 109 |
| புலிமாதர் | 135 |
| புள்ளிருக்கும் | 80 |
| பூரிகை | 250 |
| பெருங்காறு | 60 |
| பேரணி | 57 |
| பொன்ன | 111 |
| போகவோ | 212 |

| | |
|---|---|
| போதவே | 182 |
| மங்கை | 99 |
| மஞ்சுவந்து | 58 |
| மட்டாரு | 86 |
| மண்டலத்து | 75 |
| மத்தகேசம் | 27 |
| மதிகொண்ணை | 76 |
| மதியார் | 247 |
| மதிரைப்பதி | 87 |
| மதுரை | 194 |
| மந்தாள் | 234 |
| மன்னவர் | 221 |
| மாணிக்க | 115 |
| மாந்தையில் | 47 |
| மாயச்சனி | 221 |
| முப்புர | 238 |
| முருகரை | 107 |

| | |
|---|---|
| ெய்யருளான் | 176 |
| மைவிழி | 147 |
| வட்டப்பாறை | 162 |
| வண்டாடும் | 223 |
| வந்திரங்கி | 53 |
| வந்துதோ | 163 |
| வந்தே | 71,150 |
| வந்தோம் | 235 |
| வரமது | 64 |
| வருந்தியே | 218 |
| வளைத்தே | 67 |
| வாசக்கொல்ல | 159 |
| வாட்டமில்லா | 248 |
| வாணர்க் | 169 |
| விந்தை | 222 |
| விருப்பாச்சி | 51 |
| வில்லைப்பதி | 74 |

| | |
|---|---|
| விளம்பியே | 140 |
| விறலமதன் | 128 |
| வெடியவொரு | 98 |
| வெண்ணை | 56 |
| வையாபுரி | 46,205 |

## துணை நூற்பட்டியல்

1. நா. இளங்கோ.- சீதக்காதி நொண்டி நாடகமும், ஞான நொண்டி நாடகமும் ஒப்பீடு,

2. அசோகன், முத்துசண்முகன் - நொண்டி நாடகங்கள்,

3. புலவர் குழந்தை - யாப்பதிகாரம்,

4. டாக்டர் பூ. சுப்ரமணியம் - சுவடியியல்,

5. டாக்டர் ஜி.ஜான் சாமுவேல்- உதிரும் தமிழ் மலர்கள்,

6. வல்லினம் இதழ் 2007, ஜூலை.

7. ஆ. விநாயகமூர்த்தி- பதிப்புக்கலை,

8. உ.வே.சா.-என் சரித்திரம்





9. சி.வை. தாமோதரம், சி.வை.தா. (பதிப்பு, முன்னுரைகளின் தொகுப்பு)


10. எஸ்.வையாபுரிப்பிள்ளை.- காவியகாலம் தொகுதி-1,


11 மு.வ-. இலக்கிய மரபு

## எழுத்து வடிவங்கள்


நாம் தற்போது எழுதும் எழுத்து வடிவங்களி லிருந்து மாறுபட்டதாக ஓலை சுவடி எழுத்துக்கள் அமைந்துள்ளன. மிகுந்த வேறுபாடுள்ள எழுத்துக்கள் மட்டும் இங்கே கொடுக்கப்பட்டுள்ளன.


| | | |
|---|---|---|
|  | – | ஆ |
|  | – | இ |
|  | – | உ |
|  | – | ஒ |
|  | – | ஓ |
|  | – | கு |
|  | – | கூ |
|  | – | ஞ |
|  | – | ணை |
|  | – | தி |
|  | – | மு |
|  | – | மூ |

 – ரு

 – லை

 – ழு

 – றா

 – ணா

## கூட்டெழுத்துக்கள்

 – ட்ட

 – ட்டி

 – ப்ப

